பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

கீன் - திருநெல்வேலி
கலை, வர்த்தகம்
பிரிவு II
பொருளியல் — திரு. வரதராஜன்
வர்த்தகம் — திரு. ஜெயராமன்
அரசியல்—திரு. மனோகரன்
புவியியல் — திரு. சண்
ஆரம்பம் : 7-30 a. m.

உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/-

விஞ்ஞானம்
அளவையியல் — திரு. S. S. மனோகரன்
கணக்கியல் — திரு. சௌந்தி
தமிழ் — திரு. குமுந்தை
இந்துநாகரிகம் — திரு. காரை
பிரிவு II
ஆரம்பம் : 7-30 a. m.
கீன் சென்ரர்
திருநெல்வேலி

கூடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஹேவிளம்பி ஆடி மீ 06 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 06 (21 - 07 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 197

சுவிஸ் தமிழ் அகதிகளில் 3,000 பேர் அனுப்பப்படுவர்?

இங்கு வந்த அதிகாரிகள் குழு சியார்சு செய்யவிருப்பதாகத் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 21

சுவிட்சர்லாந்து (சுவிஸ்) நாட்டில் உள்ள ஈழத்தமிழ் அகதிகளில் சுமார் மூவாயிரம் பேரை, அந்த நாட்டு அரசு கட்டம் கட்டமாகத் திருப்பி அனுப்பக்கூடும் என அறிய வருகிறது.

கடந்த வாரம் இலங்கைக்கு வந்திருந்த சுவிஸ் அதிகாரிகள்குழு, தங்கள் நாட்டு அரசுக்கு இவ்விதம் சிபார்சு செய்ய முடிவு எடுத்துச் சென்றுள்ளதாக அறிய வருகிறது.

திருப்பி அனுப்பப்பட உள்ள மூவாயிரம் தமிழ் அகதிகளில் முதற் தொகுதியாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 25 பேர் அடுத்த வாரம் இங்கு வந்து சேர்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

சுவிஸ் நாட்டின் நீதி அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் குழு கடந்தவாரம் கொழும்பு வந்திருந்தார். அவருடன் மற்றும் சில அதிகாரிகளும் வந்திருந்தனர்.

இவர் வெளி நாட்டமைச்சர் ஜனுப் ஹமீதைச் சந்தித்துப் பேசிய போது, அரசியல் தஞ்சம் கோருவதற்கு தகுதியற்ற 1500 ஈழத் தமிழர்களைத் திருப்பி அனுப்பத் தமது அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

மாகாணப் பணிப்பாளர் அடுத்தவாரம் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 21

வடமாகாண கல்வித் துறை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக மாகாண பணிப்பாளர் ஒருவர் அடுத்த வாரமளவில் நியமிக்கப்படுவார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் கல்வித் துறை நடவடிக்கைகளுக்கு இந்த மாகாண கல்விப் பணிப்பாளர் பொறுப்பாக இருப்பார்.

கல்வித் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் இத்தகவலை நேற்று த் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற — கல்வித் துறையோடு சம்பந்தப்பட்ட — மாநாடு ஒன்றிலும் இத்தகவலை அவர் சூசகமாக வெளியிட்டார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

வ. பி. போ. சபைக்கு 5 சொகுசு பஸ்கள் நேற்று வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், ஜூலை21

ஐந்து சொகுசு பஸ்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

வடபிராந்தியபோக்கு வரத்துச் சபைக்கென இவை கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டன.

நேற்றுப் பிற்பகல் வந்து சேர்ந்த இந்த ஐந்து சொகுசு பஸ்களும் 60 ஸீட் தொடர் இலக்கத்தைக் கொண்டவையாகும்.

இவை நீண்ட தூர சேவைகளுக்குப் பயன் படுத்தப்படும் என்று வடபிராந்திய போக்கு வரத்துச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(9—10)

முல்லைத்தீவு - பரந்தனுக்கும் இடைப்பட்ட 32 மைல் தூரத்தில் 10 இடங்களில் சோதனை!

ஒட்டுசுட்டான் ஜூலை 21

இந்திய அமைதிப் படையினர் முல்லைத் தீவுக்கும் பரந்தனுக்கும் இடைப்பட்ட 32 மைல் தூரத்தில் 10 இடங்களில் நேற்று பயணிகள் வாகனங்களைச் சோதனை யிட்டனர்.

முல்லைத்தீவு, இரட்டை வாய்க்கால், புதுக்குடியிருப்பு, நாவலடி ஆறு, தேவிபுரம், 12ம் கட்டை, வீஸ்வமடு, தருமபுரம், புளியம்பொக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப்புலிகளிடமிருந்து ஆயுதங்களை இந்தியப் படையால் களைய முடியவில்லை

காமினி குற்றம் சாட்டுகிறார்

எனினும் இந்திய அமைதிப் படையினர் தமது பணியைச் செய்யும் வேளையில், பல ஜவான்கள் உயிரிழந்ததை எவர் ஒருவரும் கணக்கில் எடுக்காமல் இருக்க முடியாது.

அமைதிப் படையினர் விடுதலைப் புலிகளிடமிருந்து விரைவில் ஆயுதங்களைக் களைந்துவிட வேண்டும்

இவ்வாறு அமைச்சர் காமினி திஸாநாயக்கா கூறினார்.

கொழும்பில் வெளி நாட்டுச் செய்தியாளர்கள் சங்க உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் ஒன்று நடந்தது.

ஹோட்டல் சமுத்தி (6—ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி

மனுஷன் நிம்மதியாய் இருக்கக் காணயில்லே, இந்த நேரத்திலே தான் உவையள் சொகுசு பஸ் களை அனுப்புகினம்என்ன எங்களுக்கு "ஐஸ்" வைக்கிற பாக்கினம் போலே ...?

சுபநேரம்

21- 7 - 1988
வியாழக்கிழமை
சுபநேரம்:
07-31முதல் 09-01வரை
ராகுகாலம்:
01-31 முதல் 03-01வரை

விசுவமடுவுக்கு மேலதிக துருப்புகள்

தாளையடி, ஜூலை 21

கிளிநொச்சியிலிருந்து மேலும் துருப்புக்கள் விசுவமடு, தர்மபுரம் ஆகிய இடங்களுக்கு அனுப்பப் பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க் கிழமை 6 டாங்கிகளும் மேலதிகத் துருப்புக்களும் கிளிநொச்சியிலிருந்து பரந்தன்—முல்லைத்தீவு வீதியால் விசுவமடு, தர்மபுரம் பகுதிகளுக்குச் சென்றன. (9—144)

மக்கள் வெளியேற்றம்

விசுவமடு, தருமபுரம் ஆகிய இடங்களில் உள்ள மக்கள் பீதியின் காரணமாக அவ்விடங்களை விட்டு வெளியேறி கிளிநொச்சி நகருக்குச் செல்லத் தொடங்கியுள்ளனர்.

அப்பகுதியில் இளைஞர்கள் கைது செய்யப்படுவது அதிகரித்து வருகிறது.

விசுவமடுவில் இருந்து கிளிநொச்சி நகருக்கு வந்தவர்களில் ஒருவர் தகவல் தருகையில் அங்கு 20க்கு மேற்பட்ட வீடுகள் தீயிட்டு எரிக்கப்பட்டதாகவும், பொதுமக்கள் தாக்கப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

விசுவமடுவில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள இளைஞர்களின் பெற்றோர்களும் பிரசைகள் குழுவினரிடம் முறையிடுவதற்காக கிளிநொச்சிக்கு வந்துள்ளனர். (9—144)

பூஸா கைதிகளின் குடும்பத்தினருக்கு ஆரம்ப நிவாரணம்

யாழ்ப்பாணம் ஜூலை 21

பூஸா இராணுவத் தடுப்பு முகாமில் உள்ள வர்களின் 46 குடும்பங்களுக்கு நிவாரணம், குழந்தைகள் பாதுகாப்பு நிதியம் என்பன ஆரம்ப நிவாரண உதவியை வழங்கியுள்ளன. யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் மேற்கொண்ட முயற்சியின் விளைவாகவே பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆரம்ப நிவாரணம் கிடைத்துள்ளது.

இது குறித்து திரு. சிவஞானம் பூஸா முகாம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

கிழக்குப் பகுதியில் 2 மோதல் சம்பவங்கள்

கொழும்பு. ஜூலை 21

கடந்த 24 மணித்தியாலங்களில் கிழக்குப் பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்திலும், திருகோணமலை மாவட்டத்திலும் இரண்டு வெவ்வேறு மோதல் சம்பவங்கள் இடம்பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாங்கோணியில் அமைதிப் படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும்—

திருமலை மாவட்டத்தில் தோப்பூரில் கண்ணிவெடிச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த இரு தாக்குதல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

திருமலையிலும் படையினர் குவிப்பு

திருகோணமலை, ஜூலை21

திருகோணமலையில் இந்திய அமைதிப்படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் பெரும் எண்ணிக்கையான ஜவான்கள்விமானத்தில் கொண்டுவந்து சீனக்குடா விமானத் தளத்தில் இறக்கப்பட்டுள்ளனர்.

யுத்த விமானங்களும் வந்துள்ளதாக அறிய வருகிறது. விமானங்கள் அடிக்கடி திருகோணமலை ஊடாகப் பறந்து திரிவதைக் காணமுடிகிறது. இதுகுறித்து பலரும் பல வாறுகப் பேசிக் கொள்கிறார்கள். (9—150)

7 மாணவிகள் வைத்தியத் துறைக்கு

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த ஏழு மாணவிகள் பல்கலைக்கழக மருத்துவத்துறைக்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களில் ஒரு மாணவி உயர்தர பரீட்சையில் மொத்தம் 304 புள்ளிகளைப் பெற்றுள்ளார். யாழ்ப்பாண மாவட்டத்துக்குரிய வைத்தியத் துறைக்கான தெரிவு நிலைப்புள்ளி 279 என்பது குறிப்பிடத்தக்கது. (9—10)

சுழிபுரத்தில் ஹெலி ரோந்து

யாழ்ப்பாணம், ஜூலை21

சுழிபுரம், பண்ணம், தொல்புரம், நெல்லியான், சண்டிலிப்பாய் பகுதிகளுக்கு மேலாக நேற்று ஹெலிக்கொப்டர் ஒன்று சுமார் ஒரு மணி நேரம் ரோந்து சுற்றியது. (9)

கண்ணி மீட்பு

சுழிபுரம் பகுதியில் வீதியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடி ஒன்றை இந்திய அமைதிப்படையினர் மீட்டெடுத்து வெடிக்கச் செய்தனர்.

நேற்றுக்காலை இச்சம்பவம் நடைபெற்றது.

இதன் காரணமாக சுழிபுரம் பகுதியில் மக்கள் பதற்றம் அடைந்தனராயினும் பின்னர் விஷயம் தெரிந்து ஆறுதலடைந்தனர். (9—10)

சடலம் அடையாளம் காணப்பட்டது

சுழிபுரத்தில் கடந்த சனிக்கிழமை நடந்த சூட்டுச் சம்பவத்தின் போது மரணமான இளைஞனின் சடலம் நேற்று உறவினர்களால் யாழ் ஆஸ்பத்திரியில் வைத்து அடையாளம் காணப்பட்டது.

முருங்கனைச் சேர்ந்த பிரான்சிஸ் கஸ்பஸ் வயது (28) என்பவரே சுழிபுரத்தில் சுடப்பட்டு மரணமானவராவார்.

இவரது மரணம் தொடர்பான விசாரணை நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்றதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (9—10)

யாழ். செயலகம் இன்று முதல் இயங்கும்

யாழ்ப்பாணம் ஜூலை 21

யாழ். செயலகத்தின் அத்தியாவசியப் பிரிவுகள் இன்று வியாழக் கிழமை முதல் மீண்டும் செயற்படவுள்ளன.

கடந்த மாத இறுதியுடன் மூடப்பட்ட யாழ். செயலகம் இன்றுதொடக்கம் மாத இறுதி வரை இயங்கும்.

சிவில் நிர்வாகச் சீர்குலைப்பின் ஓர் அம்சமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் யாழ் செயலகத்தின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி இருப்பது தெரிந்ததே.

இதேவேளை நேற்றிலிருந்து யாழ். செயலகத்தை இயங்க விட வேண்டும் என சம்பந்தப்பட்டவர்களிடம் அதிகாரிகள் கோரிக்கை விடுத்த போதிலும் இன்றிலிருந்தே செயலகத்தைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது

(9—10)

மிருசுவிலில் தீ வைப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 21

மிருசுவில் கிராம சபையில் உள்ள தனபாலங்கள், வரி அறவிடும் புத்தகங்கள் என்பன இனந் தெரியாதவர்களினால் தீ மூட்டிக் கொளுத்தப்பட்டுள்ளன.

கடந்த வாரம் நடைபெற்ற இச்சம்பவம் குறித்து கிராமசபையின் இலிகிதர் எஸ். கனகரத்தினம் யாழ்—ஆஸ்பத்திரி பெலீஸ் பிரிவில் முறையிட்டுள்ளார். (9—10)

நவ. 16 இல் பாகிஸ்தானில் தேர்தல்

இஸ்லாமபாத், ஜூலை 21

பாகிஸ்தானில் எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி பொதுத் தேர்தல் நடைபெறும் என்று ஜனாதிபதி ஜியாவுல்ஹக் நேற்று அறிவித்தார்.

அன்றைய தினம் நான்கு மாநில சபைகளின் தேர்தல்களும் நடைபெறும் என்றும் அவர் அறிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அரசியல் கட்சிகள் போட்டியிட அனுமதிக்கப்படுமா என்பது பற்றி அவர் தெரிவிக்கவில்லை. (9—ஏ)

பரந்தன் தொடர்ந்தும்...

தாளையடி, ஜூலை 21

பரந்தன் தொடர்ந்தும் வெறிச்சோடிய நிலையிலேயே காணப்படுகின்றது.

சந்தையில் சில நடமாட்டம் காணப்படவில்லை.

அனேக கடைகள் பூட்டியே காணப்பட்டன.

பரந்தன் இந்து மகாவித்தியாலயமும் இயங்கவில்லை. (9—144)

குடும்பஸ்தர் மரணம்

சிருடையில் வந்தோர் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத கோஷ்டியினர் ஒன்று துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர் என்று பொலீஸார் தெரிவித்தனர். (9—ஏ)

இயந்திரப்படகில் மீன் பிடிக்க மீண்டும் தடை

தாளையடி, ஜூலை 21

வடமராட்சி கிழக்கு கடலில் இயந்திரப் படகுகள் மூலம் மீன் பிடிப்பதை மீண்டும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இயந்திரப் படகுகள் மூலம் மீன் பிடிப்பதற்கு முன்னர் முற்றாக விதிக்கப்பட்டிருந்ததடை பின்னர் குறிப்பிட்ட நேரங்களுக்குத் தளர்த்தப்பட்டிருந்தது. (9—144)

களுத்துறையில் இருவர் சுட்டுக் கொலை

கொழும்பு, ஜூலை 21

களுத்துறை வடக்கு பொதுச்சந்தையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத கோஷ்டியினர் ஒன்று துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர் என்று பொலீஸார் தெரிவித்தனர். (9—ஏ)

கடத்தப்பட்ட நால்வரில் 3பேர் கொலை

மட்டக்களப்பு, ஜூலை21

சம்மாந்துறை வளத்தாப்பிட்டி கிராமத்தில் ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்ட நால்வரில் மூவர் மறுநாள் சந்தியில் சடலமாக மீட்கப்பட்டனர்.

மேற்படி நபர்களில் ஒருவரது மனைவி காயங்களுடன் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (9—21)

கலைப்பீட விரிவுரைகள் ஆகஸ்ட் 1இல்

யாழ்ப்பாணம், ஜூலை21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரைகள் எதிர்வரும் ஆகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம்26 ஆம்திகதி விரிவுரைகள் ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டு இருந்தது (9)

பல்கலைக்கழக விரிவுரைகள் நடந்தன

யாழ்ப்பாணம், ஜூலை21

யாழ். பல்கலைக்கழக விரிவுரைகள் நேற்று நடைபெற்றன.

கடந்த திங்கட்கிழமை மாணவர்கள் பகிஷ்கரித்ததாலும், செவ்வாய்க் கிழமை நிர்வாக உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் கடமைகளைப் பகிஷ்கரித்ததாலும் விரிவுரைகள் நடைபெற முடியாமலே பரந்தனில் இருந்துள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பாவித்த வீட்டுத்தள பாடங்கள், Box Spring கட்டில், கட்டில் மெத்தைகள், Show Case அலுமாரி, மேசைகள் சிறிய பெரிய கபேட், கண்ணுடி மேசை, மகாராஜா ஹோல் செற், செற்றிகள் மற்றும் பல மிகவும் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம். (சென்பற்றிக் சந்தியருகில்.) (5093)

பிறிமா இன ஒருநாள் புருெயிலர் இறைச்சிக் குஞ்சுகள் லோமன் பிறவுண், வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், ஒவ்வொரு திமையும் கடைசி நாட்களில் வழங்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: ஆனந்தசிறி காட்வெயர், திருநெல்வேலி சந்தி, S. M. காட்வெயர் 11/6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (5368)

பழைய முடிமார்க் இரட்டை பீலி ஓடுகள் 1500, நல்ல வேம்பு கதவு நிலை, யன்னல்கள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு சுகலெக்ஷ்மி ஸ்ரோர்ஸ் மாட்டின் ரோட், யாழ்ப்பாணம். (5373)

றி கொன்டிசன் ஹோண்டா C50, C70, C90, MD70 R.coon GS 125 எம்மிடம் விற்பனைக்கு உண்டு. ஸ்தாபி பெரிய மணி, குத்துவிளக்கு மற்றும்கோவில் பொருட்களும் விற்பனைக்கு உண்டு. லம்ஸ், 26/3 மானிப்பாய் வீதி, இணை 76/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (4946)

புறெயிலர் (Broiler) இறைச்சி விற்பனை

புறெயிலர் (Broiler) இறைச்சி எப்பொழுதும் குறைந்த விலையில் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். R. S. K Farm முருசபதி உடுவில், R. S. K. Farm தபால் கந்தோர் வீதி, மானிப்பாய்.தொகையாக எடுப்போருக்கு சலுகை வழங்கப்படும். (4929)

கோழிக்குஞ்சு விநியோகம்

Upland Farm கூடிய விரைவில் அதிக நிறையாக வளர்ச்சி அடையக்கூடிய 'லோமான் (Lohmann)' பிறவுண் சேவல் 20 ஆம் திகதி புதன்கிழமையும், 23ஆம் திகதி சனிக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க: 9, கந்தையாலேன், (குராவத்தை ரோட்) சுன்னாகம், புகையிரத நிலையத்திற்கு அண்மையில். (5359)

ஒரு நாள் குஞ்சு விநியோகம்

ஒரு நாள் (SHETNA B-380) பேட்டுக் குஞ்சு, குறுகிய காலத்தில் கூடிய நிறை தரக்கூடிய சேவல் குஞ்சுகள், புரூய்லர் குஞ்சுகள் 22-7-88 இல் விநியோகிக்கப்படும். —R. S. K Farm: முருசபதி, உடுவில், குபேரன்ஸ்ரோர்ஸ் கொக்குவில்சந்தி, கொக்குவில். (4928)

தேவை

வீடியோ சுமராமூலம் படம் எடுப்பதில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும். விக்ரர் அன்சன்ஸ் இல: 100, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் அல்லது விக்ரேஸ் மியூசிக் சென்ரர் இல: 887 ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம். (5109)

யாழ்/மாநகரசபைவல் லீக்குள் இரண்டு அல்லது மூன்று அறை கொண்ட வீடு அல்லது அனெக்ஸ் சல வசதிகளுடன் ஓர் நிறுவனம் இயங்குவதற்கு வாடகைக்குத் தேவை. 286, C/O உதயன் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். (5366)

வேலைக்கு ஆள் தேவை

புத்தகக் கடையில் வேலை செய்து அனுபவம் உள்ளவர்கள் தேவை. திறமைக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும். நற்சாட்சிப் பத்திரங்களுடன் தொடர்பு கொள்ளவும். 284, C/o உதயன் யாழ்ப்பாணம். (5357)

Stewards தேவை

யாழ்/நகரில் அமைந்துள்ள 'Old Park Chinese Restaurant'' க்கு Stewards தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும் தொடர்பு:- ''Old Park ChinseRestaurant'' 207, Old Park Road, Jaffna. (C 5821)

மேசன்மார் தேவை

மாடிவீடு கட்டுவதில் அனுபவம் உள்ள மேசன்மார்; கூலிமார் உடனே தேவைப்படுகின்றனர். தொடர்பு:- 21, முதலாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். காலையில் - நேரில் வந்து தொடர்பு கொள்ளவும். (5365)

மணமகள் தேவை



யாழ்/இந்து பொற் கொல்லர் குலத்தைச் சேர்ந்த U. K இல் சட்டத்தரணியாக தொழில் புரியும் 35 வயதுடைய மணமகனுக்கு பெண் U. K. யில் தேவை' 2. யாழ்/இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த கனடா மணமகனுக்கு (தற்சமயம் லீவில் இங்கு நிற்கிறார் 30 வயது) பெண் தேவை. நட்சத்திரம் அச்சுவினி தொடர்பு ''ABCDE'' விவாகப் பொருத்தினர், 328, நாவலர் ரோட், ஆனைப்பந்தி. (5369)

தொண்டர் ஆசிரியர் தேவை

யாழ்/தொண்டமானாறு, வீ. ம. வித்தியாலயத்தில் கடமை புரிய தொண்டர் ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். தொண்டமானாறு கெருடாவில், பகுதியில் வதியும், க. பொ. த. (உ/த) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் அதிபருக்கு 29- 07- 88 க்கு முன்பு விண்ணப்பிக்கவும்:- அதிபர். (C/ 5824)

மணமகள் தேவை

கனடாவில் பிரயாண முகவராக பணிபுரியும் யாழ்/இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த 26 வயது நிரம்பிய மணமகனுக்கு கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த நற்பண்புடைய, அழகிய ஓரளவு படித்த மணமகள் பெற்றோர் விரும்புகின்றனர். மணமகள் கனடா செல்வதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். Photo, விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். முகவரி:- 287, C/o உதயன். (5367)

சோதிடம்-மாந்திரீகம்

நிணைத்த காரியம், ஜாதகபலன், விவாகப் பொருத்தம் எண்சோதிடம் முதலானவைக்கும், தொழில் விருத்தி மங்களமானமணவாழ்வு,மனையில் மங்களம், நோய் பிணிதீரல் சத்துருஜெயம் போன்ற சகல விடயங்களுக்கும் தொடர்பு கொள்க: ''சக்தி சரவணு'' (அரசாங்க அங்கீகாரம் பெற்ற சோதிட விற்பனர் மட்டக்களப்பு. பாரம்பரிய பரம்பரை மாந்திரீக பரிகாரகர் (210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ். இந்துக் கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) (5363)

வெளிவந்து விட்டது

புதிய பாடல்கள் வெளிவந்துள்ளன. தொடர்பு கொள்ளுங்கள் விக்ரர் அன் சன்ஸ் யாழ்ப்பாணம். விக்ரேஸ் மியூசிக் சென்ரர் சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (5110)

கல்வி

Air Conditioning Refrigeration Radio - TV வயறிங் வெல்டிங்மோட்டமெக்கானிசம் வைன்டிங் தட்டெழுத்து சுருக்கெழுத்து புதிய பிரிவுகள் திறந்த செய்முறை அறிமுறை பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றது. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும். Viapa Engineering Aid Hall 328 நாவலர்ரோட் ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில் யாழ்ப்பாணம். (5103)

மிருதங்க வகுப்புக்கள்

மிருதங்க வித்துவான் க. ப. சின்னராசா அவர்களால் மிருதங்க வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் சுன்னாகத்தில் நடாத்தப்படுகின்றன. சேரவிரும்புவோர் க. ப. சின்னராசா மயிலணி, சுன்னாகம். 2. ஏ. நீட்ஸ் K. K. S ரோட், சுன்னாகம் என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளுங்கள். (C/5822)

அடையாள அட்டை தவறிவிட்டது

K. கோபாலகிருஷ்ணன் புலோலி கிழக்கு, மாதனை, பருத்தித்துறை ஆகிய எனது அடையாள அட்டை இல. 392061487 V யாழ்ப்பாணம் - புன்னாலைக்கட்டுவன் தனியார் பஸ்ஸில் 14- 07- 88 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் விலாசத்தில் ஒப்படைக்கவும் அல்லது யாழ். உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (5354)

மயில்வாகனம் விமலாதேவி, பத்தமேனி, அச்சுவேலி ஆகியனது அடையாள அட்டை இல. 4-6-88ல் அச்சுவேலி – பருத்தித்துறை மினி வானில் பருத்தித்துறை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்யாழ்உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும் வண்ணம் பணிவாக வேண்டுகின்றேன். (5370)

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்

A/L 89

கணக்கியல்: [1வருட வகுப்பு]

திரு. ஸ்ரீ

சனி, ஞாயிறு 7.30 - 9.30

(2 மணித்தியாலங்கள்)

[அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன]

A/L 90

கணக்கியல் வகுப்புக்கள்

ஆரம்பமாகவுள்ளன.

விண்ணப்பங்களை பதிவு செய்யவும்

(C/5814)

THE EXPRESS INSTITUTE KOPPAY

A BOON TO STUDENTS

உயிரியல் பிரிவுக்கென தனித்துவம் பெற்ற இரு ஆசிரியர்களும் யாழ் நகரில் ஒருமித்த சேவையாற்றும் ஒரே ஒரு நிறுவனம்:

A/L 90

விலங்கியல்: திரு. தம்பிராஜா
(சனி, ஞாயிறு, 2-00 p. m.)

தாவரவியல்: திரு. பாலா
(சனி, ஞாயிறு, 1-00 p. m.)

(C-5895)

அன்புடன் அழைக்கிறார்கள்!
வரவேற்கிறார்கள்!
''விருந்து அளிக்கிறார்கள்''

''OLD PARK CHINESE RESTAURANT''

ஸ்தாபனத்தார்

* கலியாண வரவேற்புகளுக்கும்
* கொண்டாட்ட வைபவங்களுக்கும்

யாழ்நகரில் தனிப்பெயர் பெற்றுவிட்ட எமது ஸ்தாபனத்தில் வரவேற்பு அறை உட்பட சகல வசதிகளும் உண்டு. அமைதியான சூழ்நிலை, அனுபவம்மிக்க சேவை, குறைந்த விலையில் சுவையமிக்க, நிறைந்த சிற்றுண்டி, மற்றும் உங்கள் விருப்பத்திற் கேற்ப உணவு வகைகள். ஒரு முறை சுவைத்தவர்கள் மறுமுறையும் வருவார்கள் உங்களையும் அன்புடன் அழைக்கின்றோம் சுவைத்து மகிழ்வீர்.

Old Park Chinese Restaurant
207, Old park Road, JAFFNA.
(C 5823)

THE EXPRESS INSTITUTE KOPPAY

A/L 90

வர்த்தகம், இந்துநாகரிகம்

புதன், வெள்ளி வகுப்புகள்

3-00 p. m. இந்துநாகரிகம்
By திரு. காரை

4-00 p. m. வர்த்தகம்
By திரு. தேவா

(C-5899)

A. V. M. இன் புதிய வீடியோ படம்

''இது ஒரு மனிதனின் கதை''

நடிகர்கள்: ரகுவரன், சரத்பாபு, மாதுரி, மேனகா ஜெய்சங்கர், Y.G. மகேந்திரன்

கதை: சிவசங்கரி

இந்தியாவில் புகழ் பெற்ற விடியோ படம்.
இன்றே உங்கள பிரதிகளை பெற்றுக்கொள்ளுங்கள்

வெளியீடு: விக்ரர் அன் சன்ஸ்
(விக்ரேஸ்)
இல. 100, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C 5841)

புத்தகங்கள்

இலங்கைப் புவியியல்

A/L வகுப்புக்குரிய இலங்கைப் புவியியல் வெளிவந்துவிட்டது. அபிவிருத்திப் புவியியல், எறியங்கள் என்பனவற்றின் புதிய பதிப்புகள் விற்பனையாகின்றன. ஆக்கியோன்: க. குணராசா M. A. பிரபல புத்தகசாலைகளில்கிடைக்கும். (5104)

அறிவித்தல்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் கிழக்கில் கஸ்தூரியார் வீதியையும் வடக்கில் ராஜா தியேட்டரையும் மேற்கே விவேகானந்தா அச்சகத்தையும் தெற்கில் ஸ்ரான்லி வீதியையும் எல்லைகளாகக் கொண்டதும் மொம்ஸாக் கட்டடத்துக்கு எதிரேயுள்ளதுமான வெற்றுக்காணி சம்பந்தமாக செயலாற்றுவதற்காக விற்பனை அல்லது குத்தகை நடவடிக்கைகளுக்காக நாங்கள் எவரையும் எமது பிரதிநிதியாக அல்லது பிரதிநிதிகளாக நியமிக்கவில்லையென்றும் அக்காணி சம்பந்தமான சகல பேச்சுவார்த்தைகள் எவற்றையும் எங்களைத் தவிர வேறு எவருடனும் வைத்துக்கொள்ள வேண்டாமென்று வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

திருமதி பவானி சுஜந்தன்

திருமதி பவானி சுஜந்தன்,
வட்டுக்கோட்டை கிழக்கு
சித்தன்கேணி. (5115)

31ஆம் நாள் நினைவு அஞ்சலி

திருமதி
இராசரத்தினம் சின்னம்மா

தோற்றம்: 6- 11- 1926
மறைவு: 21- 6- 1988

பண்பின் உறைவிடமே, பாசத்தின் சிகரமே, குடும்பத்தின் திருவிளக்கே, எங்களை வாழவைக்க உங்களை அர்ப்பணித்தீர். இன்று எம்மைக் கதறவைத்து நல்லூர் கந்தனடி சேர்ந்துவிட்டீர்.

அமரரது ஈமக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும், மற்றும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அவரின் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்
167/10 கோவில் வீதி,
நல்லூர். (5253)

6 ஆம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



க. பஞ்சலிங்கம்

(கொக்கோகோலா விநியோகஸ்தர் மன்னார்)

மண்ணில்: 4- 5- 1944
விண்ணில் 25- 1- 1988

அன்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய், அன்பு மொழி பரப்பி எங்களை வழிநடத்தி வந்த அன்பு தெய்வமே! உங்கள் முகத்தை இன்று காணமல் தவிக்கின்றோம். எங்களை விட்டுப் பிரிந்து 6 மாதங்கள் ஆகிவிட்டாலும், உங்கள் நினைவு எங்களை விட்டு என்றும் அகலாது. உங்கள் ஆத்மசாந்திக்காக ஓயாது இறைஞ்சுகின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி (21- 7- 88) வியாழக்கிழமை நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மகன், உறவினர்கள்

ஜெகதீஸ்வரி ஸ்டோர்ஸ்
சின்னக்கடை,
மன்னார். (5042)

1 ஆம் வருட நினைவஞ்சலி



திரு. சின்னையா கந்தசாமி

பிறப்பு 1 – 3 – 1955
இறப்பு 3 – 7 – 1988

திதி:- 21 – 07 – 1988

''சிவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்''

பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய் கூடமைதனில் கண்ணியமாய் விளங்கிய உமது இனிய முகத்தை காணுது துடிக்கும் உங்கள் மருமகன்.

த. தவராசா (மோகன்)
சுன்னாகம் தெற்கு.

(5114)

Digitized By Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாழன் நடைபெறவேண்டிய பரீட்சை சனியன்று நடந்தது

மானிப்பாய், ஜூலை 21

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்றுவரும் இரண்டாம் தவணைக்கான பொதுப் பரீட்சை ஆரம்ப நாளான கடந்த வியாழக்கிழமை ஹர்த்தால் இடம்பெற்றதன் காரணமாக சில பாடசாலைகளில் அன்றைய பாடம் நடைபெறவில்லை.

எனினும் யாழ்ப்பாணம், நல்லூர் போன்ற கல்வி வட்டாரங்களில் அன்றைய தினம் தமிழ், சமயம் ஆகிய பாடங்களில் பரீட்சை நடைபெற்றது.

அதே பரீட்சை மாலைப்பாய் கல்வி வட்டாரத்தில் கடந்த சனிக் கிழமையே நடைபெற்றது. (இ-90)

தரம் குறைந்த பாண்

கோப்பாய் ஜூலை 21

கோப்பாய் பகுதிக் கடைகளுக்கு விநியோகிக்கப்படும் பாணில்வண்டுகள் காணப்படுகின்றனவாம்.

இது தொடர்பாக பாவனையாளர்கள் பொது சுகாதார வைத்தியஅதிகாரிக்கு மகஜர் அனுப்பி வைத்துள்ளனர். (இ-72)

19 வயதுத் தனயனை தேடும் ஒரு தாய்!

வடமராட்சி, ஜூலை 21

சுமார் ஏழு மாதங்களாக, இந்திய அமைதிப் படையினரின் பாதுகாப்பில் இருந்த தமது 19 வயது மகன் எங்கே? என்ன ஆயிற்று?

இந்தக் கேள்விகளுக்குப் பதில் தெரியாது, கண்ணீரும் கம்பலையுமாக இருக்கிறார் வல்வெட்டித்துறை கொம்மாந்தறையைச் சேர்ந்த ஒரு தாய்.

தமது நிலையை விளங்கப்படுத்தியும் தமது மகனைக் கண்டுபிடித்துத் தருவதாகவும் அதுவரை எவ்விடமும் எவ்வித முறையீடும் செய்ய வேண்டாம் என வும் அமைதிப்படையினர் கூறியிருந்தனர்.

ஆனால் அந்த மூன்று நாள் அவகாசம் கடந்த 18 ஆம் திகதியோடு முடிந்துவிட்டது.

ஆனால் இளைஞர் வசீகரன் குறித்து எதுவித தகவலும் இல்லை.

அதைத்தொடர்ந்தே இளைஞரின் தாயார் பலாலிக்கும், பிரசைகள் குழுவுக்கும் கடிதம் மூலம் தமது மகனைக் கண்டு பிடித்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார். (அ-160)

போது இவர் இம்மாதம் 18 ஆம் திகதி தப்பி ஓடிவிட்டதாக அமைதிப் படையினர் தாயாரிடம் தெரிவித்துள்ளார்கள்.

தாயார் மகன் வீட்டுக்கு வரவில்லை என்றும் தமது பிள்ளையைக் கண்டுபிடித்துத் தரும்படியும் அமைதிப்படை அதிகாரிகளிடம் வேண்டு கோள் விடுத்தார்.

எப்படியும் மூன்று நாட்களுக்குள் இளைஞரைக் கண்டுபிடித்துத் தருவதாகவும் அதுவரை எவ்விடமும் எவ்வித முறையீடும் செய்ய வேண்டாம் என வும் அமைதிப்படையினர் கூறியிருந்தனர்.

ஆனால் அந்த மூன்று நாள் அவகாசம் கடந்த 18 ஆம் திகதியோடு முடிந்துவிட்டது.

ஆனால் இளைஞர் வசீகரன் குறித்து எதுவித தகவலும் இல்லை.

அதைத்தொடர்ந்தே இளைஞரின் தாயார் பலாலிக்கும், பிரசைகள் குழுவுக்கும் கடிதம் மூலம் தமது மகனைக் கண்டு பிடித்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார். (அ-160)

முல்லைத்தீவு - வவுனியாவில் மேலதிக முகாம்கள்

ஒட்டுசுட்டான், ஜூலை 21

முல்லைத்தீவு, வவுனியா வடக்கு பகுதிகளில் இந்திய அமைதிப் படையினர் மேலதிக முகாம்களை அமைத்து வருகின்றனர்.

வவுனியா வடக்கில் மருதோடை, பழம்பாசி ஆகிய இராமங்களிலும், முல்லைத்தீவுப் பகுதியில் முத்துஐயன் கட்டு இடதுகரை, வலதுகரை, கூளாமுறிப்பு ஆகிய இடங்களிலும் மேலதிக முகாம்கள் அமைக்கப் பட்டு வருகின்றன.

இப்பகுதிகளில் படையினரின் தேடுதல்கள் தொடர்ந்து இடம் பெற்றுவருகின்றன: (இ-113)

சேவையை உயிர் மூச்சாக கருதிச் செயற்பட்டவர்

அமரர் சிவராசா நினைவுதினத்தில் உரை

காங்கேசன்துறை, ஜூலை 21

ஸ்ரீலங்கா இராணுவம் பாடசாலையில் நிலை கொண்டிருந்த சமயம் மாணவர்களின் ஆவணங்களைக் காப்பாற்றுவதற்காக சென்ற சமயம் அதிபர் அமரர் சிவராசா சுட்டுக்கொல்லப் பட்டார். கடமைக்கு அப்பால் சேவையையே தன் உயிர் மூச்சாகக் கருதி அவர் செயல்பட்டார். அவரின் இழப்பு இப்பாடசாலைக்கு மட்டுமல்ல கல்வி உலகத்துக்கே பேரிழப்பாகும்.

அமரர் திரு. மு. சிவராசாவின் ஓராண்டு நினைவுதினம் வீமன் காமம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய தெல்லிப் பளை. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. சி. சிவமகாராசா மேற்கண்டவாறு கூறினார்.

அமரரின் உருவப் படத்தையும், அவரின் பெயரில் பாடசாலை மண்டபத்தையும் திரு. சிவமகாராசா திறந்து வைத்தார்.

வித்தியாலய அதிபர் திரு. சுணேசன் தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது.

வைபவத்தில் திரு. சிவமகாராசா மேலும் பேசுகையில் கூறியதாவது:

அமரர் சிவராசா மாணவர்களின் எதிர் காலத்தை கருத்தில் கொண்டு கடமை உணர்ச்சியுடன் செயல் பட்டார்..

இவரின் இழப்பு தமிழ் இனத்துக்கு ஈடு செய்ய முடியாதது.

இவர் போன்றவர்களை சமூரம் நீண்டவு கூர வேண்டியது கடமை ஆகும்.

இப்படி அவர் கூறினர்.

முன்னாள் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம், திரு. க. நடேசபிள்ளை திரு. க. கதிரமலையான் உட்பட்ட பலர் உரையாற்றினர்கள். (இ-68)

சிறுவயதிலிருந்தே சேமிக்கப்பழக வேண்டும்

சுன்னாகம், ஜூலை 21

பாலர் வகுப்புத் தொடக்கம் உயர்தர வகுப்பு வரை கல்விபயிலும் மாணவர்கள் தினமும் வீண்செலவு செய்வதற்காக பெற்றோரிடம் பணம் கேட்டு அடம் பிடிக்கின்றார்கள். கண்ணீருடன் கறக்கப்படும் அப் பணத்தை மாணவர்கள் பதாய்களை உருவாக்கும் தீன் பண்டங்களை வாங்கிப் புசிப்பதில் செலவிடுகிறார்கள். அந்த நிலை மாற்றப்பட்டு சிறுவயதிலிருந்தே சேமிக்கப்பழக வேண்டும்— சிறிது சிறிதாகச் சேமிக்கும் பணம் கால கதியில் பல முக்கிய தேவைகளை நிறைவேற்றி வைக்கும்.

பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.எஸ். குமாரசாமி இவ்வாறு கூறினார்.

சிறுவர் சேமிப்புத் திட்ட அங்குரார்ப்பண வைபவத்தில் அவர் உரையாற்றினர்.

ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிஷன் வித்தியாலய மண்டபத்தில் நிகழ்ந்த அதிபர் திரு.ஜ. நவரத்தினம் தலைமையில் சிறுவர் சேமிப்புத்திட்ட அங்குரார்ப்பண வைபவம் நடைபெற்றது.

ஏழாலை ஸ்ரீ விநாயகர் ஐக்கிய நாணய சங்கம் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் நலன்கருதி இந்த சேமிப்புத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

ஏழாலை ஸ்ரீ விநாயகர்

மண் எண்ணெய் இல்லாததால் மக்கள் அவதி

நெடுந்தீவு ஜூலை 21

நெடுந்தீவு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண் எண்ணெய் இல்லை.

இதனால் இங்குள்ள பாவனையாளர்கள் தனியார் வர்த்தக நிலையங்களில் தமக்குத் தேவையான எண்ணெய்யைக் கூடுதல் விலைக்கு வாங்க வேண்டி உள்ளது.

இங்கு ஒரு லீட்டர் மண்ணெய் ரூபா 7 சதம் 10 க்கு விற்கப்பட வேண்டும், ஆனால் தனிப்பட்ட வியாபாரிகளிடம் ரூபா 9க்கும் அதிகமான விலையில் பணம் கொடுத்தே பாவனையாளர்கள் மண்ணெய் பெறவேண்டியுள்ளது. (இ-111)

மினிபஸ் விபத்து!

ஆனையிறவு சண்டி வீதியில் நிகழ்ந்த மினிபஸ் விபத்தொன்றில் சாரதி பலத்த காயங்களுக்குள்ளாகியதால்லிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

கொழும்பிலிருந்து பிரயாணிகளை ஏற்றிவந்த ஊர்காவற்றுறையைச் சேர்ந்த இம்மினிபஸ்ஸில் வந்த அனைவரும் மயிரிழையில் உயிர்தப்பினர்.

கொழும்பிலிருந்து பல பிரயாணிகளோடு வந்த இம்மினிபஸ் ஆனையிறவு உப்பளத்தைத் தாண்டியபோது முன்னால் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இன்னொரு மினிபஸ்மீது பின்புறமாக மோதியது.

இடம்மாறியது

திருகோணமலை, ஜூலை21

திருமலை நீதிவான் இல்லத்தில் இதுவரை இயங்கிவந்த இந்திய அமைதிப்படையினரின் முகாம் இப்போது அருகிலுள்ள தனியார் காணியில் அமைக்கப்பட்டுள்ளது. (இ-150)

ஊரடங்கு வேளையில் மட்டுவிலில் நடந்த கத்திமுனைக் கொள்ளை!

யாழ்ப்பாணம், ஜூலை 21

ஊரடங்கு நேரத்தில் றிஸ்கத்தி, கோடரி ஆகியவற்றுடன் சென்ற இனந்தெரியாத கோஷ்டியினர் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

மட்டுவிலில் உள்ள கந்தப்பு குணசேகரம் என்பவரது வீட்டில் கடந்த வாரம் இச்சம்பவம் நடைபெற்றது.

இச்சம்பவம் பற்றி அவர் யாழ். ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

அவர் தெரிவித்த முறைப்பாட்டின் விவரம் வருமாறு:—

13 ஆம் திகதி இரவு 11 மணி அளவில் எமது வீட்டினுள் நுழைந்த நான்குபேர் என்னையும் எனது மனைவி, மாமியாரையும் வெளியே வரும்படி அழைத்து விருந்தையில் இருக்க வைத்துவிட்டு அறைக்குள் நுழைந்து கொள்ளையில் ஈடுபட்டனர்.

கொள்ளையடிக்க வந்தவர்கள் தமது கண்களை மட்டும் தெரியக்கூடியதாக விட்டு முகத்தைக் கறுப்புத் துணியினால் மூடி இருந்தனர்.

இவர்கள் கிறிஸ்கத்தி, கோடரி, பொல்லு என்பனவும் வைத்திருந்தனர்.

பின்னர் எம்மை ஓர் அறைக்குள் வைத்துப் பூட்டி விட்டு மேலும் கொள்ளையில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக எனது வீட்டில் இருந்த இரண்டு தாலிக்கொடிகள், இரண்டு சங்கிலிகள், ஐந்து வளையல்கள், அட்டியல், மணிக்கூடுகள் என்பனவும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அமைதிப்படையினரிடம் முறையிட்டுள்ளேன்.

கொள்ளையர்கள் இது தொடர்பாக யாரிடமும் பேசக்கூடாது எனவும் எச்சரித்துச் சென்றனர்.

இவ்வாறு அவரது வாக்கு மூலம் பதியப்பட்டுள்ளது. (ஒ-10)

சிமெந்து உற்பத்தி - விற்பனை அதிகரிக்கப்படவேண்டும்

அமைச்சிடம் கோரிக்கை

காங்கேசன்துறை, ஜூலை 21

கடந்த காலங்களில் காங்கேசன் சிமெந்து ஆலைக்கு ஏற்பட்ட பாதிப்புகளை சீர் செய்து சிமெந்து உற்பத்தியையும் விற்பனையையும் அதிகரிக்க ஆவன செய்ய வேண்டும்.

காங்கேசன் சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சிடம் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

மேற்படி யூனியனின் 19 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் சங்க வளவில் இடம்பெற்ற சமயம் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு வழங்கிய புதிய சம்பள மாற்றத்தில் ஏற்பட்டுள்ள விகிதாசார ஏற்றத்தாழ்வுகளை மீளாய்வு செய்யுமாறு உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சைக் கோருதல்கியது.

தொழிற்சாலையின் குடிசனப்பகுதியில்முன்பு இருந்தது போல் மீண்டும்கொங்கிறீட்பொருள்களை உற்பத்தி செய்ய ஆவனசெய்யப்பட வேண்டுமென கோருதல் போன்றதீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (சி-68)

சிறுவர் பாதுகாப்பு நிதியம் உதவி

காங்கேசன்துறை, ஜூலை 21

வீமன்காமம் மகாவித்தியாலயத்துக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் மின் மோட்டார்ஒன்றை அன்பளிப்புச் செய்தது.

வலி-வடக்கு பிரசைகள் குழுக்களின் ஒன்றியம் விடுத்த கோரிக்கையை அடுத்து நிதியம் இந்த உதவியை வழங்கியது. (இ- 68)

கலர் பிலிம் சுருள்களை கொம்பியூட்டர் மூலம் பிரதி செய்ய விரும்புகிறீர்களா?

FREE 8"X10" ENLARGEMENT

பிரதி 4-00

கொழும்பு ஸ்ரூடியோ
யாழ்ப்பாணம்

ஈழத்திலும்

சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்

* பகவான் சத்தியசாயிபாபா நேரடிதரிசனம்
* தென்னிந்திய புனித ஸ்தல யாத்திரை
* நம்பிக்கையான (CANADA) பயண ஒழுங்கு

மேலதிக விபரத்திற்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரிகள்:

கிளை
24/11 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

தலைமையகம்
33, 1ஆவது மாடி, புதிய ஜெமினி கொம்பிளக்ஸ் சென்னை - 6
தொலை பேசி: 475382.

* குறிப்பு: தென்னிந்திய புனித ஸ்தல யாத்திரை 10.8.88 ஆரம்பம்

(C 5710)

எதிர்காலத்தில் சிறந்த வீரர்களை உருவாக்கும்

கோப்பாய் ஜூலை 21

எமது பாடசாலை எதிர் காலத்தில் சிறந்த வீரர்களைப் பெற்றுக் கொடுக்கும். இச்சிறிய பாடசாலையின் வினையாட்டுப் போட்டிக்கு இவ்வளவு பெரும் எண்ணிக்கையானோர் வந்து எம்மை உற்சாகப்படுத்தியுள்ளனர்.

கரந்தன் இராமுப் பின்னை வித்தியாலயத் தின்வருடாந்தஇல்லவினையாட்டுப் போட்டியில் உரையாற்றிய வினையாட்டுச் செயலாளர் செ. நவரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த இல்ல வினையாட்டுப்போட்டிக்கு பிரதம விருந்தினராக நீர்வேலி கொத்தணி அதிபர் திரு. தங்கராஜா கலந்து கொண்டார்.

வள்ளுவர் இல்லம் முதலாம் இடத்தையும் கம்பர், நாவலர் இல்லங்கள் முறையே இரண்டாம் மூன்றும் இடங்களையும்பெற்றுக்கொண்டன. (இ-72)

49 சதவீத விவசாயிகள் சிபார்சு செய்யப்பட்டதிலும் கூடுதல் கிருமிநாசனி பாவிப்பு

கொழும்பு, ஜூலை,21

சிபார்சு செய்யப்பட்டதிலும் பார்க்க அதிக அளவில் கிருமிநாசினிகளை 49 சதவீத விவசாயிகள் பயன்படுத்துகின்றனர்.

கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாடு ஒன்றில் சுகாதார அமைச்சுச் சேர்ந்த டாக்டர் எச். எம். எஸ். எஸ். டி. ஹெரத் இத்திடுக்கிடும் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:

40 சதவீதமான விவசாயிகளே சிபார்சு செய்யப்பட்ட அளவு கிருமிநாசினியைப் பயிர்களுக்கு பாவிக்கின்றனர்.

4.5 சத வீத விவசாயிகள் மிகக்குறைந்த கிருமிநாசினியையே பாவிக்கின்றனர். 5.9 சத வீத விவசாயிகள் கிருமிநாசினியே பாவிப்பதுஇல்லை.

இப்படி அவர் கூறினார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு - கிழக்கில் தேர்தல்

வேண்டாம்: போராளிகளிடம்

இடைக்கால அரசை ஒப்படைக்குக

வடபிராந்திய இ. தொ. கா. பொறுப்பதிகாரி கோருகிறார்

வவுனியா, ஜூலை 21

வடக்கு – கிழக்கு மாகாணங்களில் தேர்தல்கள் தற்போதைக்கு தேவை இல்லை. தியாகிகளான போராளிகளிடம் ஒரு வருடத்துக்காவது இடைக்கால ஆட்சி ஒப்படைக்கப்பட வேண்டும்.

வட பிராந்திய இ. தொ. கா. பொறுப்பதிகாரியும் பொதுசனத் தொடர்பு அதிகாரியுமான திரு. பி. மதுரப் பிள்ளை விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

வடக்கு, கிழக்கில் தற்போது தேர்தல் அவசியம் இல்லை. தேர்தல் நடத்தினால் அமைதிக்குப் பங்கம் ஏற்படும்.

ஆகவே போராளிகள் ஒற்றுமையாக சேர்ந்து அமைதியை நிலைநாட்ட வேண்டும். சுமார் ஒரு வருடமாவது தியாகிகளான போராளிகளிடம் இடைக்கால ஆட்சியை ஒப்படைக்க வேண்டும்.

அமைதியும் அபிவிருத்தியும் ஏற்படுத்தப்பட்டு அகதிகளாக வெளிநாடுசென்ற தமிழ் மக்கள் அனைவரும் திரும்பியபின் தேர்தல் நடத்துவது உகந்தது.

அரசாங்கம் கருதுவது போன்று உடனடியாகத் தேர்தல் நடத்தினால் பல உயிர்களுக்கு ஆபத்தும் நாட்டிலே அமைதியின்மையும் ஏற்படும்.

ஆகவே அரசாங்கம் போராளிகளிடம் இடைக்கால அரசை ஒப்படைக்கவேண்டும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

பண்பாடுபற்றிய அறிவு பூர்வமான நூல்கள் அவசியமாகின்றன

மட்டக்களப்பு, ஜூலை21

பண்பாட்டின் விழிப்புணர்வுக்கு பண்பாடுபற்றிய அறிவுபூர்வமான நூல்கள் அவசியமானவை.

பேராசிரியர் மனோசபாரத்தினம் இவ்வாறு கூறினார்.

கிழக்குப் பல்கலைக்கழக இந்து மாமன்றத்தினர் 'இந்துநதி' என்னும் சஞ்சிகையை அண்மையில் வெளியிட்டு வைத்தனர்.

விழாவுக்குத் தலைமை வகித்து பேராசிரியர் மனோசபாரத்தினம் உரை நிகழ்த்தினார்:

வெளியிட்டுவிழா மட்டக்களப்பு மத்தியகல்லூரியில் நடைபெற்றது.

''பல்கலைக்கழக அறிஞர்களது ஆய்வுக் கட்டுரைகளைத்தாங்கி வெளிவந்துள்ள இந்துநதி எமது பண்பாட்டைப் பல்வேறு கோணங்களில் நோக்குகின்றது. சிறப்பாக கிழக்கின் இந்துமத வரலாற்றுச் சிறப்புகளை ஆழ ஆராய்கின்றது''.

இவ்வாறு கூட்டத்தில் உரைநிகழ்த்திய பலரும் வலியுறுத்திக் கூறினர்.

தமிழ் அறிஞர் எவ். எக்ஸ். சி. நடராசா விமர்சன உரை நிகழ்த்தினர்.

இதழாசிரியர் பா. ராஜநந்தன் நன்றியுரைவழங்கினர். (இ–5)

புதிய கோபுரம்

புங்குடுதீவு, ஜூலை 21

புங்குடுதீவு மேற்கு மூன்றும் வட்டாரத்தில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தின் தென்புற வாசலில் ஐந்து இலட்சம் ரூபா செலவில் கோபுரம் அமைக்கப்பட்டு வேலைகள் பூர்த்தி அடையும் நிலையில்உள்ளன.(இ–31)

கலைப்பிட மாணவர் கவலை தெரிவித்து அறிக்கை

யாழ்ப்பாணம் ஜூலை 21

யாழ். பல்கலைக்கழக இறுதியாண்டுபெறுபேறு கனேதிர்பார்த்துக்கொண்டிருந்த மாணவனும் முன்னுள் பல்கலைக்கழக அமைப்புக்குழுஉறுப்பினருமாகிய விமலேஸ்வரன் இனம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டதையிட்டு யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளார்கள்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் நிகழாமல் இருக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு கலைப்பீட மாணவர்கள் சார்பாக விடுக்கப்பட்டுள்ளஅறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

பற்றுச்சீட்டு இல்லாததால் மாணவர் பாதிப்பு

ஜீ. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களுக்கு பணம் கட்டிப் பெறவேண்டிய பற்றுச்சீட்டுகள் தபால் நிலையங்கள் சிலவற்றில் இல்லாததால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

ரயில் சேவை சீர்குலைவால் குறிப்பிட்ட காலத்தில் குடாநாட்டிலுள்ள தபால் நிலையங்களுக்கு இப்பற்றுச் சீட்டுகள் வந்து சேரவில்லை. (இ–68)

கரவெட்டி மேற்கு உச்சில் மத்தொனிக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை21

கரவெட்டி மேற்கு உச்சில் மத்தொனியில் பிறபான்மைத் தமிழர் சமூகத்தினர் வாழும் பகுதிகளுக்கு இதுவரை மின்விநியோகம் வழங்கப்படவில்லை.

இது விடயத்தில் அரச அதிபருக்கும், மற்றும் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்த மகஜர்களுக்கும் இதுவரை எதுவித பதிலும் இல்லை. எனவே இதனை நாம் சிறுபான்மையினர்க்கான சமூக ரீதியான ஒரு புறக்கணிப்பாகவே கருத வேண்டியுள்ளது.

இவ்வாறு கரவெட்டி மத்தொனி, திருவள்ளுவர் சன சமூக நிலையத்தின் சார்பில் அதன் செயலாளர் ஆ. வன்னியசிங்கம் ஒப்பமிட்டு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெய்யும் மழை, வீசும் காற்று, கதிரவனின் ஒளி, நிலவின் நிலா என்பன எல்லோருக்கும் கிடைப்பது போல மின்சாரமும் சாதிபேதமின்றி அனைவருக்கும் கிடைக்க வேண்டும்.

ஆனால் இதுவிடயத்தில் எமது மத்தொனி கிராமம் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. இது விடயத்தில் திருவள்ளுவர் சனசமூக நிலையமும் உச்சில் கிராம அபிவிருத்திச் சங்கமும் கூட்டாக எடுத்துக் கொண்ட பல முயற்சிகளும், அனுப்பி வைத்த மகஜர்களும் இதுவரை எந்தவித பலனையும் தரவில்லை.

மின்சாரம் இன்மையால் மத்தொனிப்பகுதி மாணவர்களின் கல்வி நிலையும் பெரிதும் பாதிக்கப்படுகிறது. எரிபொருள் விலையேற்றத்தால் இப்பகுதி மக்கள் கைவிளக்கு கூட எரிக்க முடியாத நிலை உள்ளது.

எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து உரிய நடவடிக்கைகுஆவன செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது, (இ-9)

முன்றாவது முறையாக சேத விவரம் கோரப்படுகிறது

நெடுந்தீவு ஜூலை 19

கூட்டுறவுத்துறை அமைச்சு சமீபத்தியவன் செயல்களினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு பல. நோ. கூ. சங்கங்களிடம் கேட்டுள்ளது.

சேதங்கள் குறித்த விவரங்களை அமைச்சு கோருவது இது மூன்றாவது தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ–111)

திருமலையில் வகுப்புகள் பகிஷ்கரிப்பு

திருகோணமலை அர்ச்சூசையப்பர் பாடசாலையைச் சேர்ந்த உயர் வகுப்பு மாணவர்கள் சென்றவெள்ளிக்கிழமை முதல் வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர்.

வர்த்தக ஆசிரியர் ஒருவர் இதுவரை நியமிக்கப்படாததே இந்தப் பகிஷ்கரிப்புக்குக் காரணம்.

கடந்த ஒருவருடமாக வர்த்தக ஆசிரியர் இல்லாத குறையை மேலிடத்துக்கு பலமுறை எடுத்துக் கூறியும் இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை.

இதனால் தங்கள் படிப்பு பாழாகின்றது என்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவர்கள் கூறினர். (இ–150

விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ள மறுப்பு

புதுக்குடியிருப்பில் இப்படியும் ஒருநிலை

புதுக்குடியிருப்பு, ஜூலை 21

மீளக்குடியிருப்பு நிவாரணம் பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்களை வாங்குவதற்கு புதுக்குடியிருப்புமக்களின் ஒரு பகுதியினர் மறுப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இது பற்றிக் கூறப்படுவதாவது:–

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இந்திய அமைதிப்படையினரின் தேடுதல் நடவடிக்கை கடந்த வருடம் அக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து அப்பகுதி மக்கள் பலர் தமது வீடுகளை விட்டு வெளியேறி இருந்தனர்.

இதுவரை வெவ்வேறு இடங்களில் அகதிகளாக இருந்து தமது சொத்துக்கள், பணம் அனைத்தையும் இழந்த நிலையில் வேறு வழியின்றி மீண்டும் தமது வீடுகளில் குடியிருக்கத் தொடங்கியுள்ளனர்.

அதேசமயம் இராணுவ முகாமைச் சுற்றிய 500 மீற்றர் பிரதேசத்தில் மக்கள் குடியிருப்பதை அமைதிப்படையினர் அனுமதிக்காததால் அப் பகுதியில் குடியிருந்தோர் தொடர்ந்தும் அகதிகளாகவே உள்ளனர்.

இந்த நிலையில் அனைவருக்கும் மீளக் குடியிருப்பு நிவாரணத்தை வழங்கி விட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான உணவு நிவாரணத்தை அரசு நிறுத்திவிடலாம் என்ற ஐயம் அவர்கள் மத்தியில் இருந்து வருகிறது.

''வீட்டை விட்டுஅகதிகளாக வெளியே சென்றவர்கள் அனைவரும் மீண்டும் தத்தமது வீடுகளில் குடியிருக்கத் தொடங்கியுள்ளனர். இவர்களுக்கான உணவு நிவாரணம் வழங்கப்படவேண்டும்''

இவ்வாறு அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இதுபற்றி புதுக்குடியிருப்பு மேற்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு கிராமோதய சபையும் மேலதிகாரிகளுக்குத் தனது ஆலோசனைகளை அனுப்பியுள்ளது. (இ–126)

புத்தூர் வீனஸ் வெற்றி!

சாவகச்சேரி ஜூலை 21

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட வினாயாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்திய முதலாவது உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டிகளின் இறுதிப் போட்டிகள் மோகனதாஸ்விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. புத்தூர் வீனஸ் வெற்றிபெற்றது.

இப்போட்டியில் ஆவரங்கால் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் புத்தூர் வீனஸ் கழகத்துடன் மோதியது.

புத்தூர் விக்னேஸ்வரா கழகமும் யாழ் கிறீன்பீல்ட் கழகமும் காட்சி ஆட்டங்களை நடத்தின.

புத்தூர் வீனஸ் கழகம் வெற்றியீட்டி முதலாம் பரிசான வயன்ஸ் கேடயத்தையும் ஆவரங்கால் சரஸ்வதிக் கழகம் இரண்டாம் பரிசான அறவழிக் கேடயத்தையும் பெற்றுக் கொண்டன.

கிளிநொச்சி லக்கிஸ்டார் கழகம் கௌரவப் பரிசைப் பெற்றது.

லயன்ஸ் கழக முன்னாள் தலைவர்வைத்திய கலாநிதி திரு. பே. பிலிப் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்ததுடன் வெற்றி பெற்றோருக்குக் கேடயங்களையும் பரிசில்களையும் வழங்கினார்.

நிலையத்தலைவர் திரு. வே. தங்கராசா நன்றி தெரிவித்து உரையாற்றினார். (இ–31)

தற்கொலை!

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தாயார் ஒருவர் கயிற்றில் தூக்குப் போட்டுத் தற் கொலை செய்து கொண்டார். (இ–72)

நீண்டகால இடைவெளிக்குப் பின் கற்சிலைமடு கிராமம் மின்னொளி பெறுகிறது

ஒட்டுசுட்டான், ஜூலை21

கற்சிலைமடு கிராமத்துக்கு நீண்ட கால இடைவெளிக்குப் பின் மின் விநியோகம் விரைவில் கிடைக்க இருக்கிறது.

இப்பகுதிக்கான மின் விநியோகம் நீண்டகாலமாக இராணுவத்தினரின் நடவடிக்கையால் தடைப்பட்டிருந்ததால் அப்பகுதி மக்கள் பெரிதும் கஷ்டமுற்றனர்.

கற்சிலைமடுகிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ. குமாரசுவாமியின் முயற்சியும் சுன்னாகம் மின்சார சபையினரின் உதவியாலும் மின் இணைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தியாகியுள்ளன.

மின் விநியோகத்தை முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. சு. பொன்னம்பலம் அடுத்த மாதம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைப்பார் என சங்கத் தலைவர் தெரிவித்தார். (இ–113)

சட்டவிரோத சாராயம்

கோப்பாய் ஜூலை 21

கோப்பாய் பகுதியில் சட்டவிரோத சாராய விற்பனை அதிகரித்துள்ளது. (இ–72)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு

1. Saudi Arabia: சவூதி அரேபியா:

Saudi Operation & Maintenance Company Limited

S. O. M. C.

1. Electrician	—	SR 600
2. Mechanic	—	SR 600
3. A/C. Technician	—	SR 700
4. Electrical Engineer	—	SR 2000
5. Plumber	—	SR 600
6. Drivers	—	SR 600
7. Masons	—	SR 600
8. Carpenters	—	SR 600
9. Eletronic Technician	—	SR 700
10. Telephone Technician	—	SR 600
11. Telephone Operator	—	SR 700
12. Power Plant Operator	—	SR 700
13. Power Plant Mechanic	—	SR 700
14. Power Plant Electrician	—	SR 700
15. Painter	—	SR 600
16. Welder	—	SR 600

WITH FOOD ALLOWANCE

Age - 21 - 49 years

FLIGHT: 15-9-88 க்கு முன் பயணம்

2. Kuwait: குவைற்:

United Shiping Company Cleaners

300 Vacancies - Salary 30 K.D

மேற்படி விபரம் அறிய உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

T.V. TRAVELS & TOURIST

BROWN ROAD,

(Railway Station Front)

KOKUVIL.

(C 5869)

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

A/L 89

1 வருட வகுப்பு

புவியியல் - க. குணராஜா, M.A.

சனி, ஞாயிறு - 2 மணி

ஆரம்பம் : 23-07-88

(C 5878)

31 ஆம் நாள் நினைவாஞ்சலி

திரு. கிருஸ்ணபிள்ளை நாகராசா "சிற்பகலா ஜோதி"

மலர்வு: 11-5-1952 உதிர்வு: 21-6-1988

சிங்கப்பூர் தேசமதில்
சிலைவடிக்க நீர் சென்றீர்
சிற்பகலா ஜோதியே!
சிந்தனையில் நீர் வடித்த சிற்பமெல்லாம்
சிலைவடிவாய் நிற்கையிலே,
நீர் மட்டும் எமை விட்டு
திசையினிலே போனீரோ?
பாவிகள் நாம் இங்கு
பரிதவித்து நிற்கின்றோம்
பாசமுள்ள உம் மக்கள்
பதறித் துடிக்கின்றனர்
நேசமுள்ள எம் தலைவா!
நீர் நெடும் பயணம் சென்றாலும்
வாழ்வீர் என்றும் எம்
உள்ளத்தில் அணையா ஒளி விளக்காய்!

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, மக்கள்,
தேவாலய வீதி, உற்றார், உறவினர்கள்.
சங்கானை. (5111)

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி பாக்கியம் கணபதிப்பிள்ளை

தோற்றம்: 20-8-1916 மறைவு: 12-8-1986

திதி:- 21-7-1988

எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் நின்று எம்மை வாழ்வித்த அன்புத் தெய்வமே! நீங்கள் ஆத்மசாந்திபடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரிகள்.

NO. 7, கைலாசபிள்ளையார்கோயில் வீதி, யாழ்ப்பாணம். (5081)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

குறள்:

அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉம் இல்.

பொருள்:

அவையின் தன்மை அறியாமல் சொல்லு தலை மேற்கொள்கின்றவர், சொற்களின் வகை அறியாதவரே; அவர் சொல்லவல்லதும் இல்லை.

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22703
21-07-1988 த. பெ. இல. 23

பரந்தன் தொழிற்சாலைக்கு ஏன் இந்தப் பாடு?

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையைத் திறப்பதற்கான நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. அதற்குப்பதில் அதனை மூடிவிட்டு, தெற்கில் புதிய தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதிலேயே அரசாங்கம் அக்கறை காட்டிவருகிறது.

பரந்தன் தொழிற்சாலையை மூட உத்தேசித்திருப்பதற்கான காரணங்களைக் கூறுவதிலும், அவற்றை நியாயப்படுத்துவதிலும் அமைச்சர் தொடக்கம் அதிகாரிகள் வரை அதிக அக்கறை காட்டிவருகிறார்கள்.

இவ்வருடம் ஏப்ரல் மாதம் பத்தாம் திகதி உதயனில் "உடனே திறக்குக" என்ற தலைப்பில் எழுதப்பட்ட ஆசிரியத் தலையங்கத்தில் —

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையைத் திறப்பதில் காட்டப்படும் தாமதம், அதனை மூடுவதற்கு அறிகுறியா என்று சந்தேகம் எழுப்பி இருந்தோம். அந்தச் சந்தேகத்தை வலுப்படுத்தும் விதத்தில் கைத்தொழில் அமைச்சர், அவரது அதிகாரிகள் ஆகியோரின் கூற்றுக்கள் அமைந்திருக்கின்றன.

இயந்திராதிகள் பழையவை என்று காரணம்காட்டித் தொழிற்சாலையையே மூடிவிடுவதற்குக் கங்கணம் கட்டிவிட்டார்கள். உலக வங்கியையும் அதற்கேற்ற விதத்தில் மடக்கிவிட்டார்கள்.

தெற்கில் ஆரம்பிக்கத் திட்டமிடும் தொழிற்சாலையில் பொருத்த இருக்கும் புதிய இயந்திரத்தைப் பரந்தனில் பொருத்தி அதனைப் புனரமைக்கமுடியாதா?

மனம் இருந்தால் நிச்சயம் இடம்உண்டு. நான்கு தசாப்தங்களாக இயங்கும் ஒரு தொழிற்சாலையை மூடிவிட்டு, புதிதாக ஒன்றை வேறு இடத்தில் தொடங்குவது என்பது வஞ்சகமான நடவடிக்கை. வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்படும் சூழ்ச்சி.

பரந்தன் தொழிற்சாலையைப் புனரமைத்து அதனை இயங்கவைத்தபின்னர், தெற்கில் புதிய தொழிற்சாலை ஒன்றை நிறுவ அரசு முயற்சித்தால் அதனை எவரும் ஆட்சேபிக்க நியாயமில்லை.

ஆண்டுகள் பலவாக இயங்கி, நாட்டின் குளோரின், சோடா தேவைகளைப் பூர்த்திசெய்துவந்த பரந்தன் தொழிற்சாலையை மூடுவது என்பது தமிழர்களின் பொருளாதாரத்தை, தமிழ்ப்பிரதேசங்களின் முன்னேற்றத்தை வீழ்ச்சி அடையச் செய்யவேண்டும் என்ற அரசின் பேரினவாதச் சித்தாந்தத்தைப் பிரதிபலிப்பதே.

தமிழர்களின் பொருளாதாரத்தை இயன்றளவு வழிகளிலும் வீழ்ச்சி அடையச் செய்து, அவர்களை அரசியல் அடிமைகளாக வைத்திருக்கவேண்டும் என்ற பேரினவாதக் கொள்கையை எங்கெங்கு நடைமுறைப்படுத்த முடியுமோ அங்கங்கு எல்லாம் யு.என்.பி. அரசு கனகச்சிதமாக அமுல் செய்துவருகிறது.

தமிழர் பிரதேசங்களில் உள்ள விவசாய, மீன்பிடி, கைத்தொழில் வளங்களைத் தக்கபடி பயன்படுத்தி பொருளாதார மேம்பாட்டை உண்டாக்குவதற்குப்பதிலாக, இருக்கும் வளங்களையும், வாய்ப்புகளையும் அது சீர்கெடுத்துவரும் சூழ்ச்சிக்குப் பின்னணி அரசியல் நோக்கமே அன்றி வேறில்லை.

தமிழர் பொருளாதாரத்தைக் கெடுக்கவென்றே செயற்பட்டுவரும் இலங்கை அரசின் உள்நோக்கத்தை அறியாது உலக வங்கி போன்ற நிதி வழங்கும் ஸ்தாபனங்கள் கண்ணை மூடிக்கொண்டு அதன் சிபார்சுகளையும், செயற்திட்டங்களையும் ஏற்றுக்கொள்வது கவலைக்குரியது; நிறுத்தப்பட வேண்டியது.

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை விடயத்தில், உலக வங்கியையும் இலங்கை அரசு தவறாக வழிநடத்தி ஏய்க்கப்பட்டிவருகிறது. இலங்கையின் மருட்டலில் உலக வங்கி மயங்கிவிடாது, பரந்தன் தொழிற்சாலையை புனரமைக்க உதவுவது என்ற தனது ஆரம்பத் திட்டத்தை செயற்படுத்த முன்வரவேண்டும்.

ஞான வைரவர் புனரமைப்பு வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம் ஜூலை 21

கொக்குவில் சபாபதி வீதியில் உள்ள தலையாளி ஞான வைரவர் கோவிலின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பமாகி உள்ளன.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 14 ஆம் திகதி கும்பாபிஷேகம் நடாத்தும் உத்சேதத்துடன் சீர்திருத்த வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

திருப்பணி செய்ய விரும்புவோரின் ஆதரவும் கோரப்படுகிறது. (இ)

சமரசப் பேச்சுக்களில்

நிக்கரகுவா அதிபர் ஒட்டேகா கலந்து கொள்ளவேண்டும்!

'கொன்ரா' நிபந்தனை

மனாகுவா, ஜூலை 20

கொன்ராக்கிளர்ச்சிக்காரர்களுக்கான யுத்த நிறுத்தத்தை ஒருதலைப்பட்சமாக மேலும் ஒரு மாத காலத்துக்கு நிக்கரகுவா அரசு நீடித்துள்ளது.

சமரசப் பேச்சுக்கள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண கிளர்ச்சிக்காரர்களுக்கு இன்னொரு சந்தர்ப்பம் அளிக்கும் நோக்கத்தில்தான் யுத்த நிறுத்தத்தை நீடித்திருப்பதாக ஜனாதிபதி டானியல் ஒட்டேகா அறிவித்தார். கொன்ராக் கிளர்ச்சிக்காரர்களுக்கும் அரசுக்கும் இடையே ஏற்பட்ட முதலாவது 60 நாள் யுத்த நிறுத்தம் சென்ற மே மாதம் 31ம் திகதியுடன் முடிவடைந்தது.

அதன்பின்னர் நிக்கரகுவாஅரசு மூன்று தடவைகள் தன்னிச்சையாக நீடித்தது.

இருதரப்பினருக்கும் இடையேயான சமரசப் பேச்சுக்கள் சென்ற மாதம் தோல்வியில் முடிவடைந்தன.

அதன்பின்னர் பேச்சுக்களைத் தொடர நிக்கரகுவா முயற்சித்துவருகிறது. ஆனால் கொன்ராக் கிளர்ச்சிக்காரர்கள் நிபந்தனை விதித்துள்ளனர்.

நிக்கரகுவாவின் தலைநகரில் சமரசப் பேச்சுக்கள் இனி நடத்தப்படவேண்டும் என்று அரசு அறிவித்துவிட்டது.

ஆனால் கிளர்ச்சிக்காரர்களோ, நிக்கரகுவாவுக்கு வெளியில் பேச்சுக்களை நடத்தவேண்டும் என்றும் —

அப்பேச்சுக்களில் அரசுத்தலைவர் டானியல் ஒட்டேகா நேரடியாகக் கலந்துகொள்ளவேண்டும் என்றும் நிபந்தனை விதித்துள்ளனர். (எ)

ஸியாவுக்கு நெருக்கடி

இஸ்லாமபாத் ஜூலை 20

பொதுத் தேர்தலுக்கான திகதியை அறிவிக்கும்படி பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியாஉல்ஹக்குக்கு நெருக்குதல் கொடுக்கப்பட்டு வருவதாகக் அறிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் முஸ்லிம் கட்சியின் தலைவரான முன்னாள் பிரதமர் முகமட்கான் ஜூனஜோ பொதுத்தேர்தல் உடனே நடத்தப்படவேண்டும் என்று கோரியுள்ளார். (எ)

வன்செயல்களை அடக்க படைபலம்; சோவியத் அரசு எச்சரிக்கை

மாஸ்கோ, ஜூலை 20

ஆர்மேனியா மாநிலத்தில் வன்செயல்களை அடக்க பாதுகாப்புப்படை முழு அளவில் பயன்படுத்தப்படும் என்று சோவியத் அரசுத் தலைமைப்பீடம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அஸர்பைஜான் மாநிலத்துடன் உள்ள கரபா பகுதியை ஆர்மோனியாவுடன் இணைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை சோவியத் சுப்ரீம் சவுன்ஸில் நிராகரித்து விட்டது.

இதைத் தொடர்ந்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேவை ஏற்படுமானால் காலவரையற்ற ஊரடங்குச் சட்டமும் பிறப்பிக்கப்படும் என்றும் அந்த எச்சரிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதனிடையில் தனது அரசியல் சீர்திருத்தக் கொள்கைகளை எதிர்ப்பவர்கள் மாநிலங்களுக்கு இடையேயான தரைவழிகளைத் தூண்டி விடுவதாக சோவியத் தலைவர் மிக்கையில் கோர்பச்சேவ் குற்றஞ்சாட்டினார். (எ)

ஈரான் மீதான தாக்குதல் தொடரும் என்று ஈராக் அறிவிப்பு

பக்தாத், ஜூலை 20

சமாதானத்தில் உண்மையாகவே அக்கறை உண்டு என்பதைச் செயலில் ஈரான் காட்டும் வரை தொடர்ந்து தாக்குதலை நடத்தப் போவதாக ஈராக் அறிவித்திருக்கிறது.

ஐ. நா. வின் யுத்த நிறுத்தக் கோரிக்கையை நிபந்தனையற்ற முறையில் ஏற்றுக் கொண்டுவிட்டதாக ஈரான் அறிவித்த பின்னர் ஈராக் அரசு இதனை வெளியிட்டது.

இதனிடையில் வளைகுடாவில் ஈரானும் ஈராக்கும் பரஸ்பரம் தாக்குதலில் ஈடுபட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

உடனே யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கும் படியும், நிதானமாகச் செயல்படும் படியும் ஐ.நா. பொதுச் செயலாளர் பெரெஸ்டி குயிலர் இரு நாடுகளுக்கும் வேண்டுகோள் விடுத்தார்.

இரண்டு நாடுகளின் தூதர்களையும் பொதுச் செயலாளர் அழைத்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

வெளி உலகில்

ராஜீவ் நாடு திரும்பினர்

புதுடில்லி, ஜூலை 20

பிரதமர் ராஜீவ்காந்தி நான்கு நாடுகளுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று நாடு திரும்பினார்.

ஜோர்டான், யூகோஸ்லேவியா, துருக்கி, ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு இவர் விஜயம் செய்திருந்தார். (எ)

ஜனமோர்ச்சாவுடன் ஜெயலலிதா கூட்டு?

சென்னை, ஜூலை 20

ஜெயலலிதா அணி வி. பி. சிங். தலைமையிலான ஜனமோர்ச்சா கட்சியுடன் கூட்டுச் சேர்வது பற்றிய விஷயம் தகுந்த நேரத்தில் பரிசீலிக்கப்படும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஜி. கே. மூப்பனார் தெரிவித்தார்.

ராஜபாளையம் சென்ற போது மூப்பனார் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

கேள்வி: தங்களின் சுற்றுப்பயணம் அரசியல் ஸ்டண்ட் என்று ஜெயலலிதா கூறி உள்ளாரே!

மூப்பனார்: ஜெயலலிதா பேச்சுக்கு எல்லாம் நான் பதில்சொல்ல வேண்டியதில்லை.

கேள்வி. ஜெயலலிதா பிரச்சினையில் அரசு அதிகாரி நடராஜனின் தலையீடு குறித்த புகார்பற்றி என்ன கூறுகிறீர்கள்?

பதில்: அரசு குறித்த பிரச்சினையில் அரசாங்கம் தான் இதைக் கவனிக்க வேண்டும்.

கேள்வி: காங்கிரஸ் பிரமுகர் குமரி அனந்தன் நாடகத்தில் நடிக்கிறாரே!

பதில்; அண்ணாவே நடித்திருக்கும்போது குமரி அனந்தன் நடிக்கக் கூடாதா? (எ)

இருவரும் இணக்கம்

வாஷிங்டன் ஜூலை 20

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடவுள்ள திரு. மைக்கல்டுகாகிஸ் தனது எதிர்ப்பாளரின் வண. ஜெஸிஜாக்ஸனுடன் 3 மணி நேரம் இரகசியப் பேச்சுக்களை நடத்தி சமரசமானார்கள்.

ஜனநாயக வேட்பாளர்கள் நியமனத்தைப் பெறும் முயற்சியில் திரு. தீ. டுகாகிஸிடம் வண. ஜாக்ஸன் தோற்றுவிட்டார்.

பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவருக்கு ஸிம்பாப்வேயில் ஏற்பட்ட அனுபவம்

ஹராரா, ஜூலை 20

பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர் ஜில் கின்னொக் ஸாம்பியாவில் உள்ள விமானத்தளம் ஒன்றில் சென்று இறங்கிய போது பாதுகாப்புப் படையினரால் சில மணிநேரம் தடுத்துவைக்கப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டது.

மொஸாம்பிக்கில் இருந்து இராணுவ விமானம் ஒன்றில் திரு கின்னொக் தனது மனைவியுடன் சென்று இறங்கினார் அவருடன் பி.பி.சி செய்யாளரும் சென்று இருந்தார்.

விமானத்தில் இருந்து இறங்கியவுடன் பாதுகாப்புப் படையினர் திரு. கின்னொக் குழுவினரை அழைத்துக் கொண்டு குடிசை ஒன்றுக்கு அழைத்துச் சென்றனர்.

திரு கின்னொக் இந்த நடவடிக்கைக்கு ஆட்சேபம் தெரிவித்தார். பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிகளைக் காட்டிப்பயமுறுத்தினர்.

ஒரு மணித்தியாலத்தின் பின்னர் குழுவினர் விடுவிக்கப்பட்டனர்.

சம்பிய அரசு இச்சம்பவம் குறித்து திரு கின்னொக் குழுவினரிடம் வருதம் தெரிவித்தது. (எ)

திருச்சபை வேண்டுகோள்

ஜெனிவா, ஜூலை 20

தென் ஆபிரிக்காவின் அடக்குமுறைச் சட்டங்களை எதிர்த்து சாத்வீக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும்படி ஜெனிவாவைத் தலைமையகமாகக்கொண்டு இயங்கும் உலக திருச்சபைகள் சவுன்ஸில் சகல திருச்சபைகளையும் கேட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (எ)

அரசியல் தஞ்சம்

அமெரிக்கக் கடற்படையில் வேலை செய்து வந்த ஊழியர் ஒருவர் சோவியத் யூனியனில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார் என்று அறிவிக்கப்பட்டது.

சில ஆண்டுகள் மாஸ்கோவில் உளவாளியாக இவர் செயல்பட்டு வந்தாராம். (எ)

விடுதலைப்புலிகளுடன் சமரசம் காணாது தேர்தலுக்கு இந்தியா இணங்கக்கூடாது

திருமலை அன்னையர் முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம் ஜூலை 21

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானத் தீர்வு ஒன்றைக் காணாது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இலங்கை அரசு தேர்தல் நடத்துவதற்கு இந்திய அரசு இணங்கக் கூடாது.

சுவரொட்டிப் போராட்டத்தை முன்னெடுத்து திருகோணமலை அன்னையர் முன்னணி விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை விபரம் வருமாறு:-

இந்திய அரசாங்கம் 1987 ஜூலை 29 இல் தமிழ் பேசும் மக்களின் நலனைப் பாதுகாப்பதற்காக என்று இலங்கை அரசுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது.

அமைதியைக் காப்பதற்காகவென பெரும் எண்ணிக்கையான இராணுவக் திரளையும், பொலீஸ்காரையும் இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பியது.

இதுவரையும் தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய நியாயமான தீர்வு ஒன்றையும் ஏற்படுத்தவில்லை.

தமிழ் ஈழப் போராட்டத்தின் மூலமாக தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையை தமிழர் தாயகமாகக் கருதக் கூடிய வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நிலை நாட்டக் கூடிய தாக தமிழ் பேசும் மக்களுக்குக் கிடைத்த பேரம் பேசும் சக்தியைப் பலவீனப்படுத்துவதற்கு இந்திய அமைதிகாக்கும் படையினர் பயன்படுத்தப்படுகின்றனர்.

தமிழ் பகுதிகளில் நடைபெறும் சிங்களக் குடியேற்றங்களைத் தடைசெய்வதற்கோ, பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கோ, சீர்குலைக்கப்பட்ட பொலீஸ் மற்றும் நீதி மன்றங்களைப் புனரமைப்புச் செய்வதற்கோ, அவசியமான இடைக்கால அரசொன்றை அமைப்பது குறித்துத் தமிழீழ விடுதலைப் புலிகள் வைத்து வரும் கோரிக்கையை இந்திய அரசாங்கம் உதாசீனப்படுத்தி வருகின்றது.

உண்ணாவிரதம்

சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவுப் பொறுப்பாளரான திலீபன் மரணமுற்றார். இந்த மரணம் ஏற்பட்டபின்னர் இணங்கப்பட்ட இடைக்கால அரசை மீண்டும் வழங்குவதற்கு இந்திய அரசால் இலங்கை அரசை வலியுறுத்த முடியவில்லை.

ஒப்பந்தத்தின் பின் போராளிகளை இலங்கை அரசின் பாதுகாப்புப் படையிடம் இருந்து பாதுகாப்பதற்குஇந்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்காததால் தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகளை [illegible] ஆயுதங்களை [illegible] இதனை அடுத்து இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு இணங்கிச் செயற்பட தமிழீழ விடுதலைப்புலிகள் மறுத்தனர்.

தமிழ் பேசும் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று தமிழ் அன்னையர்களால் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பல இடங்களில் நடத்தப்பட்ட அகிம்சைப் போராட்டங்கள் அனைத்தும் இந்திய அரசின் போக்கை மாற்றவில்லை.

இத்தகைய போராட்டங்களின் விளைவாக மட்டக்களப்பிலே அன்னையர் முன்னணி நடத்திய சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் அன்னை பூபதி கணபதிப்பிள்ளை மரணமுற்றார். யுத்த நிறுத்தம், சமாதானத் தீர்வும் வேண்டுமென இன்று தமிழ் பேசும் மக்கள் மத்தியில் நிலவும் ஒற்றுமையைக் கூட இந்தியா பொருட்படுத்தவில்லை.

இந்தியா தமிழீழவிடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகக் கூறிக்கொண்டு தேடுதல் என்ற போர்வையில் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

வடக்குக் கிழக்கு மாகாணங்களை இராணுவ ஆட்சிக்குள் உட்படுத்தி தமிழ் பேசும் மக்களுக்கு மேலும் துன்பங்களை உண்டாக்குவதற்காக இந்திய அமைதிகாக்கும் படை பயன் படுத்தப்படுவதை திருகோணமலை அன்னையர் முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர்கள் சுதந்திரமாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபடத்தக்கதாக யுத்த நிறுத்தம் ஒன்றை இந்திய அரசு உடனடியாகப் பிரகடனப்படுத்த வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானத் தீர்வொன்றைக் காணாது, வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இலங்கை அரசு தேர்தல் நடத்துவதற்கு இந்திய அரசு இணங்கக்கூடாது.

இனப் பிரச்சினைக்கு சமாதானத்தீர்வு காணப்படாமல் வடக்குக், கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றங்கள் நடைபெறுவதைஇந்திய அரசு தடுக்க வேண்டும்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்து கைது செய்யப்பட்டுப் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலிலோ அல்லது சிறைப்படுத்தியோ வைக்கப்பட்டிருக்கும்தமிழ்இளைஞர்கள் அனைவரையும் விடுவிப்பதற்கு இந்திய அரசு இலங்கை அரசைவற்புறுத்த வேண்டும்.

இப்படி அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (இ-150)

தூர்தர்ஷனுக்குபேட்டி அளிக்க மறுப்பு

யாழ்ப்பாணம் ஜூலை 21

இந்திய டெலிவிஷனான தூர்தர்ஷனுக்கு பேட்டி அளிப்பதற்கு பத்தித்துறை பிரசைகள் குழு, பருத்தித்துறை புனர்நிர்மாணக் குழு ஆகியவை மறுப்புத் தெரிவித்துள்ளன,

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஒரு வருடகால பூர்த்தி எதிர்வரும் 29 ஆம்திகதி வருகிறது.

இதனை முன்னிட்டே இந்திய டெலிவிஷன் படப்பிடிப்பாளர்கள் இங்கு வந்து வீடியோ படம் பிடித்துவருகின்றனர்.

இவர்களுக்குப் பேட்டி அளிக்கவே மேற்கண்ட இரு ஸ்தாபனங்களும் மறுப்புத் தெரிவித்துள்ளன.

தமிழர்களின் அபிலாஷைகளுக்கு மதிப்பு அளிக்காது தவறான முறையில் பிரசாரம் செய்யப் படுவதாலேயே தாம் பேட்டி அளிக்க மறுத்ததாக பருத்தித்துறை புனர்நிர்மாணக் குழு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் நெசவாளர் கூட்டுறவுச்சங்கம்

யாழ்ப்பாணம் ஜூலை 21

யாழ் மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மீண்டும் தமது வழமையான சேவைகளை ஆரம்பித்துள்ளது.

முன்பு சேவையாற்றிய யாழ். மணிக்கூட்டு வீதியிலேயே மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (சி)

இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலய நூற்றாண்டு விழா

வவுனியா, ஜூலை 21

வவுனியா இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா நகரும் இறம்பைக்குளம் தெற்கிலுப்பைக்குளம் பகுதிகளும் விழாக்கோலம் பூண்டிருந்தன.

மன்னார் ஆயர் அதிவணக்கத்திற்குரிய கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழா நடைபெற்றது.

காலையில் கூட்டுத் திருப்பலி நடைபெற்றது.

வவுனியா அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் உட்பட பல அரச அதிகாரிகளும் பொதுமக்களும் பெருந்திரளாக மதவேறுபாடு எதுவுமின்றி நூற்றாண்டுவிழா நிழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள்.

பிற்பகல் தெற்கிலுப்பைக்குளத்திலிருந்து ஆரம்பமான புனித அந்தோனியாரின் திருச்சொரூபப் பவனி தோரணங்கள் அலங்காரவளைவுகள் புனித அந்தோனியாரின் நூற்றாண்டு விழா பதாகைகள் ஆகியன அமைக்கப்பட்டிருந்த வீதிகள், நகரக் கடைவீதிகள் வழியாக இரவு இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தை வந்தடைந்தது. (ஒ-164)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

* சேட்டிங் * சூட்டிங்ஸ்
* குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
* றெடிமேட் ஆடைகளுக்கும்

யாழ்நகரில்

மயூரா சென்ரர்

13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

உதயன்

21 - 07 - 1988 வியாழக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
* மணிப்புரி
* காஞ்சிபுர * பெனரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள

மயூரா சென்ரர்

13 B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.

சைக்கிள் டயர்
உலகில் உயர் வட்டம்
DSI டயர்

* பாதையில் முழுமையான பிடிப்பு
* உன்னத தொழில் நுட்பம்
* வாடிக்கையாளர் விருப்பு
* நீடித்த உழைப்பு
* நியாய விலை

இவையனைத்தும் ஒருங்கே
உள்ளடக்கி SLS முத்திரையுடன்
உங்களை அடைகின்றன
DSI டயர்களும் ரியூப்புகளும்

சம்சன் றப்பர்
இன்டஸ்ட்ரீஸ்
(பிவிரி) லிமிட்டேட்
மஹார, கடவத்தை.

விநியோகஸ்தர்கள்:
தயாஜீ டிஸ்ரிபியூட்டேர்ஸ்
55/11 கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(5254)

கொக்குவில்
வளர்மதி முன்னேற்றக் கழகமும்
சனசமூக நிலையமும் நடத்தும்

மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் தனது இருபத்தைந்தாவது (25ஆவது ஆண்டு வெள்ளிவிழா) ஆண்டு விழாவையொட்டி நொக்கவுட் முறையிலான ஏழுபேர் கொண்ட பன்னிரண்டு ஓவர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது. இதில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் 30-7-88ஆம் திகதிக்கு முன்னதாக பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும் தனது 25ஆவது ஆண்டு விழாவையொட்டி (வெள்ளிவிழா) நொக்கவுட் முறையிலான 7 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது. இதில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் 30-7-1988ஆம் திகதிக்கு முன்பதாக பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

விளையாட்டுப் பொறுப்பாளர்,
வளர்மதி முன்னேற்றக் கழகமும்
சனசமூக நிலையமும்
சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
(C 5842) கொக்குவில்.

வேலணை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
வேலணை

அறிவித்தல்

அங்கத்தவர் இடாப்பு முடிவுறுதல்
3- ஆம் காலாண்டு

கிளைக்குழுத் தேர்தலுக்காக அங்கத்தவர் இடாப்பு 30 - 9 - 88 உடன் மூடப்பட விருக்கிறது.

ஒரு பங்கின் பெறுமதி ரூபா 10/-

பத்து ரூபாவுக்குக் குறைவான பங்கையுடைய அங்கத்தவர்கள் மிகுதிப் பணத்தை மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன் தத்தமது கிளைகளில் செலுத்தி பூரண அங்கத்தவராகு மாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

புதிதாக அங்கத்தவர்களாகச் சேர விரும்பும் தகுதியுடையோர் தங்களுக்கு அண்மையிலுள்ள எமது கிளையில் உரிய விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து ரூபா 10 செலுத்திமேற்குறிப்பிட்ட திகதிக்கு முன் கிளை முகாமையாளரிடம் ஒப்படைத்து அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்ளவும்.

செயலாளர்
வேலணை ப. நோ. கூ. சங்கம்,
வேலணை,
19- 07- 1988. (C 5835)

ஒட்டுசுட்டானில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

ஒட்டுசுட்டான், ஜூலை21

ஒட்டுசுட்டான் பகுதியில் உள்ள பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றைத் திங்கட்கிழமை நடத்தினர்.

முத்து ஐயன்கட்டு, பேராறு, கற்சிலைமடு, கூளாமுறிப்பு, கருவேலன்கண்டல், புளியங்குளம், சம்மளங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவமாணவிகள் பெருந்திரளாக இத்தப்பேரணியில் கலந்து கொண்டனர்.

பேரணியை அப்பகுதி பொது ஸ்தாபனங்கள் முன்நின்று நடத்தினர்.

நான்கு அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து, கோரிக்கைகளை சுலோகஅட்டைகளில் எழுதி கையில் ஏந்தியவண்ணம் பேரணி சென்றது. இறுதியில் ஒட்டுசுட்டானில் முகாமிட்டிருக்கும் இந்திய அமைதிப்படை முகாமிற்குச் சென்று அங்கிருந்து பொறுப்பதிகாரியிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

(ஒ-113)

விக்ரு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

A/L 90
பிரிவு 2

சனி, ஞாயிறு
ஆரம்பம்:- 30- 07- 88
(8 - 00 a.m.)

89 பிரிவு 3
ஆரம்பமாகிவிட்டது

முக்கிய குறிப்பு:-

I. கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களால் ஒருங்கிணைந்து நடாத்தப்படுகின்றது.

II. மாணவர்கள் பிரிவு 2 க்கான அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ள வேண்டும்.

(C/5837)

BECON
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
A/L 90
விஞ்ஞானம்
சனி, ஞாயிறு வகுப்பு

திரு. மணியம்:
பௌதிகவியல் 8-30 — 9-30

திரு. சத்தீஸ்:
இரசாயனவியல் 12-00 — 1-45

திரு. நல்லையா:
தூய/பிரயோக கணிதம் 1-15 — 3-45

திரு. தம்பிராஜா:
விலங்கியல் 1-45 — 2-45

திரு. சர்வானந்தா:
தாவரவியல் 2-45 — 3-45

ஆரம்பம்: 23-07-88
சனி 8-30 a. m.

பிரிவு II A/L 90

திரு. மணியம்:
பௌதிகவியல் 4-00

ஆரம்பம்: சனி
4.00

(C-5829)

விடுதலைப் புலி.....

[1ம்-பக்கத் தொடர்ச்சி]

ராவில் செவ்வாயன்று நடந்த இக்கலந்துரையாடலில் மகாவலி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திலநாயக்காவும், தொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற்றும் கலந்து கொண்டனர்.

அமைச்சர் திஸநாயக்கா அங்கு சொன்ன தாவது:-

"தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து இந்தியா ஆயுதங்களை முழுமையாகப் பறித்து இருக்கவேண்டும். அதை இந்திய இராணுவம் செய்யத் தவறி விட்டது"

இந்திய - இலங்கை அமைதி உடன்பாட்டை தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்பதற்கு இந்தியா வகை செய்திருக்கவேண்டும்; அல்லது அவர்களை முற்றிலும் அழித்திருக்க வேண்டும். இந்த இரண்டையுமே இதுவரை செய்வதற்கு இந்தியா தவறி விட்டது.

விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்கி அவர்களைச் சரணடையச் செய்யவேண்டும்.

இப்படி அமைச்சர் காமினி திஸநாயக்கா சொன்னார்.

இந்திய இராணுவத்தினர் மீது அமைச்சர் காமினி திஸநாயக்கா தெரிவித்தகுற்றச்சாட்டு பற்றி இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற் பதிலளித்துப் பேசுகையில் சொன்னதாவது:-

"யதார்த்தத்தில் என்ன இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது இந்திய இராணுவம் சிறப்பாகவே செயற்பட்டு வந்திருக்கிறது.

"விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களில் ஒரு சிலர் உடன்பாட்டை ஏற்க மறுப்பதன் விளைவாகவே இன்னும் இலங்கையில் முழு அமைதி ஏற்படவில்லை. ஆயினும் சென்ற நகரில் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்துக்கும் இடையே தொடர்ந்து பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.

இதுவரை காலமும் இந்திய அமைதிப்படையின் 500 ஜவான்கள் மரணமடைந்தனர். 1500 பேர் காயமடைந்துள்ளனர்.

விடுதலைப்புலிகளைத் தேடும் நடவடிக்கை நடைபெற்றுவரும் அதே வேளையில் அவர்களை அரசியலில் ஈடுபடச் செய்யும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. -இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதே வேளை -

அமைச்சர் காமினி திஸநாயக்கா இந்தியா மீது தெரிவித்த குற்றச்சாட்டுக்களை இந்தியத் தூதர் டிக்ஸிற் ஒப்புக் கொண்டார் என்று பி. பி. சி. அறிவித்தது.

(அ-ஏ)

பூஸா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மில் உள்ள திரு யோ. ஞானப்பிரகாசத்திற்கு கடித மூலம் தெரியப்படுத்தி உள்ளார்.

பூஸா இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் குடும்பத்தினரை கடந்த 11 ஆம் திகதி வருகை தரும்படி வேண்டுகோள் விடுத்திருந்தேன். அதன்படி 46 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் சமுகமளித்திருந்தனர். இவர்களுக்கு ஆரம்ப நிவாரண உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களை மீண்டும் 25 ஆம் திகதி வருமாறு பிரஸ்தாப உதவி நிறுவனங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இவர்களுக்குத் தொடர்ந்தும் நிவாரண உதவிகள் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன- என்று அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ - 5)

32 மைல்,.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கனி, முரசுமோட்டை ஆகிய பத்து இடங்களில் படையினர் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டு இச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்னர்.

இதனால் மக்கள் மத்தியில் பெரும் பீதி நிலவியதுடன் பீரயாணம் பல மணி நேரம் தாமதித்தது.

இது இவ்வாறு இருக்க மாங்குளம் - கூளாமுறிப்புக்கு இடைப்பட்டகாடுகள் கிராமங்களுக்குள் துருப்புக்கள் ஆயிரக் கணக்கில் ஊடுருவி இடைவிடாத தேடுதலை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஒ - 113)

மாகாண,...

[1ம்-பக்கத் தொடர்ச்சி)

ளர்கள் நியமிக்கப்படுவது தொடர்பான ஆலோசனையை அமைச்சரவை ஏற்று அங்கீகரித்துவிட்டது. தற்போது இந்த விடயம் கல்விச் சேவை ஆணைக்குழுவின் கவனத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. கல்விச் சேவை ஆணைக்குழு இது தொடர்பான மேல் நடவடிக்கைகளை இந்த வாரத்தில் எடுக்கும் என்றும், அடுத்த வாரத்தில் மாகாணப் பணிப்பாளர் நியமிக்கப்படுவார் என்றும் சம்பந்தப்பட்ட உயரதிகாரி மேலும் தெரிவித்தார்.

தற்போது வடக்கின் முக்கிய மாவட்டம் ஒன்றின் கல்விப் பணிப்பாளரே வடமாகாணப் பணிப்பாளராக நியமிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ)

சுவிஸ்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேருடன் மேலும் 1500 பேரைத் திருப்பி அனுப்ப வேண்டும் என்று பிரேரணை செய்யத் திரு. ஆர்ப்பொன்ஸும் அவருடன் வந்த அதிகாரிகளும் முடிவு செய்திருப்பதாக மிக நம்பிக்கையாகத் தெரியவருகிறது.

இவர்கள் யாழ்ப்பாணத்துக்கும் வந்திருந்தனர். ஆனால் அரச அதிகாரிகள் எவரையும் சந்திக்காது, யாழ் நகரில் உள்ள சர்வதேச நிறுவன அதிகாரிகளைச் சந்தித்தும், அவர்களுடன் சென்று பல இடங்களையும் பார்வையிட்டும் சென்றனர்.

அதன் பின்னர் மொத்தம் மூவாயிரம் ஈழத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்ப வேண்டும் எனத் தாம் அரசுக்குப் பிரேரணை செய்ய முடிவு செய்திருப்பதாக சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நிறுவன அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்துச் சென்றனர் என மிக நம்பிக்கையாக அறிய வந்தது. (அ-10)

கிழக்குப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவங்களிலும் இருதரப்பிலும் உயிர்ச்சேதம் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது.

எனினும் உயிரிழப்புக் குறித்துச் சரியான எண்ணிக்கை விவரம் கிடைக்கவில்லை. (ஒ)

பல்கலைக்கழக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விஞ்ஞானபீட மாணவர்களுக்கேதற்பொழுது விரிவுரைகள் நடைபெற்று வருகின்றன.

இது இவ்வாறு இருக்க பல்கலைக்கழக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க முன்பு பயன்படுத்தப்பட்டு வந்த விளையாட்டு மைதானத்தை தற்காலிகமாக பயன்படுத்த நிர்வாகம் இணக்கம் தெரிவித்துள்ளது. (ஒ-5)

62 நிலையங்களில் ஜி. சி. ஈ. உயர் பரீட்சை

யாழ். மாவட்டத்தில் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை இம்முறை 62 பரீட்சை நிலையங்களில் நடைபெறும்.

23 ஆம் திகதி ஆரம்பமாகும் இப் பரீட்சைக்கு பாடசாலைகளைச் சேர்ந்த 6 ஆயிரத்து இருநூற்றி நாற்பத்தேழு (6, 247) பரீட்சார்த்திகளும், 3 ஆயிரத்து நானூற்றி நாற்பத்தைந்து (3,445) தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர்.

பரீட்சை நடப்பதற்கான சகல ஆயத்தங்களும் யாழ். கல்வித் திணைக்களத்தினுல் செய்து முடிக்கப்பட்டுள்ளன. (ஒ-10)

மரண அறிவித்தல்கள்

திரு. வைத்திலிங்கம் தேவராசா

ஓய்வு பெற்ற கொழும்பு துறைமுக அதிகாரசபை உத்தியோகத்தர், சித்தங்கேணி. கல்நகரைச் சேர்ந்த திரு. வைத்திலிங்கம் தேவராசா அவர்கள் 19-7-88 அன்று காலமானர். அன்னர் கனகாம்பிகையின் அன்புக் கணவரும், தே. கணேசராசா, (சிங்கப்பூர், சவூதியில் பணிபுரிந்தவர்), தே. மோகனராசா (சவூதிஅரேபியாவில் பணிபுரிந்தவர்), தேவகலாநிதி, அழகேந்திரன் ஆகியோரின் அருமைத் தந்தையும், இ. அழகேந்திரன் (டோகா) திருமதி தவராணி கணேசராசா (சிநோர்), திருமதி ரதிமலர் மோகனராசா ஆகியோரின் மாமனரும், க. இவாஸ்கரன், க. பகிரதன், க. சந்திரகாந் ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னரின் பூதவுடல் இன்று 21-07-88 வியாழக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அன்னரின் "தேவாம்பிகை வாசா" எனும் இல்லத்தில் இருந்து தகனக் கிரியைக்காக கொத்தத்துறை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்ரூர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்: **தே. கணேசராசா.**
கல்நகர்,
சித்தங்கேணி. (5259)

திரு. செல்லப்பா சின்னத்தம்பி

சுன்னகம் கொத்தியாவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சுன்னகம் மத்திய மின்சார நிலைய இயந்திர இயக்குனருமாகிய திரு. செல்லப்பா சின்னத்தம்பி அவர்கள் 20-7-88 புதன்கிழமை அகால மரணம் அடைந்துவிட்டார். அன்னரது ஈமக்கிரியைகள் 21-7-88 இன்று வியாழக்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் சுன்னகத்தில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னகம் பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்ரூர், உறவினர், நண்பர்கள் அத்தகவலை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்ரூர்கள்.

தகவல்:
கெங்காதேவி சின்னத்தம்பி.
(மகாலி)
(5116)

திரு. தம்பு செல்வரத்தினம்

நாவாந்துறையைச் சேர்ந்த ஆயுர்வேத வைத்தியர் தம்பு செல்வரத்தினம் காலமானர். அன்னர் ஆனைக்கோட்டை குருசுமதவடியைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பு, தங்கம் ஆகியோரின் அன்பு மகனும், செல்வதியம்மாவின் அன்புக் கணவரும், மங்களகௌரி, மகேசன் (சேகர்) (ஆட்டிஸ்ற்) இராஜேஸ்வரன் (பழம்) (இத்தாலி) ஜீவேஸ்வரன், பிரியதர்ஷினி (வைத்தீஸ்வரவித்தியாலயமாணவி) ஆகியோரின் அருமைத் தந்தையும், ஜெயரட்னம், லதாநாயகி ஆகியோரின் மாமனரும், ஜெஸ்ரினாவின் அன்புப் பேரனும், தவமணியின அன்புச் சகோதரருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் 15- 7- 1988 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு வில்லூன்றி மயானத்தில் நடைபெற்றது என்பதனை உற்ரூர், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்ரோம்.

தகவல்:
குடும்பத்தினர்
70/5, கடற்கரை வீதி,
நாவாந்துறை.
(5348)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 21 - 07 - 1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Thursday 21 st July 1988.

Digitized by Noolaham Foundation
noolaham.org aavanaham.org